Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

1 JUN 2004

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION | MONEY TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்

மூலம்
வங்கிக் கணக்கு தேவையில்லை.
தரகு (Commission) ஏதுமில்லை.
எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472
(சி/2228)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 22 (11.06.2004) வெள்ளிக்கிழமை இதழ் : 283

# சிரேஷ்ட அமெரிக்கப் படைத்தளபதி இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்!

## பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வார்



(கொழும்பு)

**அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப்.ஜெனரல் ஜேம்ஸ் எல்.கம்பெல் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

குகுலேகங்க என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஐ.நா. அமைதிகாப்பு உதவி நடவடிக்கைகளுக்கான பயிற்சி நிலையத்தின் திறப்பு விழாவிலும், பன்னாட்டு பிளட்டூன் ஒத்திகை ஆரம்ப நிகழ்விலும் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப்.ஜெனர்ல் ஜேம்ஸ் எல்.கம்பெல் நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

இவர் இன்று யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகள் குறித்தும், இராணுவத் தளங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் விரிவாக ஆராய விருப்பதாகத் தெரியவருகிறது.

இன்று யாழ்.வரும் அமெரிக்கத் தளபதி குடாநாட்டுக்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால உள்ளிட்ட சிரேஷ்ட படையதிகாரிகளையும் குறிப்பிட்ட சில சிவில் அதிகாரிகளையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்துடன், தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்கும் இவர் விஜயம் செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

லெப்ஜெனரல் கம்பெல் நாளையே கொழும்பு திரும்புவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்கிழமை கூடிய போது ஆளும் கட்சியினரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளைக் கண்டித்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகஜர் ஒன்றை சபாநாயகரிடம் நேற்றுக் கையளித்தனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் மீது அதிருப்தி கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்தே மகஜரைக் கையளித்துள்ளன.

நேற்றுக்காலை நாடாளுமன்றக் கட்டடத்தில் ஐக்கிய தேசியக்கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழர் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்று கூடி தற்போதைய அரசியல் நிலைகுறித்து ஆராய்ந்தன.

இந்தச் சந்திப்பின் போது நாடாளுமன்றத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதன் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் மீது நீண்ட காலம் நம்பிக்கை கொள்ள முடியாது என்றும்

எனவே எதிர்க்கட்சிகளின் கூட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹைஏஸ் விபத்தில் ஒருவர் பரிதாப மரணம்!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி அல்வாய்ப் பகுதியில் ஹைஏஸ் வான் ஒன்று மின் கம்பத்துடன் மோதியதில் முன் ஆசனத்தில் அமர்ந்து பயணித்த ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கடும் மழை பெய்து கொண்டிருந்தபோது இடம்பெற்ற இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது

வதிரி-திக்கம் வீதியில் அல்வாய் மானாண்டிச் சந்தைக்கு அண்மையில் கடும்மழை பெய்து கொண்டிருந்த போதே- ஹைஏஸ் வான் மின்கம்பத்துடன் மோதியது.

இந்தவிபத்தில் முன்ஆசனத்தில் அமர்ந்து பயணித்த அல்வாய் வடமேற்கு திக்கத்தில் வசிக்கும் இராசதுரை இராகவன் (வயது34) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சாரதி மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலத்தினை பொலிஸார் மந்திகை மருத்துவமனையில் ஒப்படைத்தனர். பதில் நீதிவான் குமாரசாமி சடலத்தைப் பார்

## துறைமுகங்களின் பாதுகாப்பு கடற்படையினரிடம் ஒப்படைப்பு!

(கொழும்பு)

சர்வதேச கரையோரப் பாதுகாப்பு அமைப்பின் வழிகாட்டல்களுக்கு அமைய - நாட்டிலுள்ள முக்கிய துறைமுகங்களின் பாதுகாப்பு, கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள சகல துறைமுகங்களின் பாதுகாப்புத் தொடர்பான அறிக்கையை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் போக்குவரத்து கையளித்தார்.

இந்த அறிக்கை கையளிப்பு நிகழ்வில் விமானப் போக்குவரத்து துறைமுகங்கள் அமைச்சின் தலைவர் திலீப விஜயசுந்தர, முகாமைத்துவ பணிப்பாளர் டபிள்யு. ஜி.சமரதுங்க ஆகியோரும் உடனிருந்தனர்.

இதேவேளை - இந்த நிகழ்வில், அமைச்சர் மங்கள சமரவீரவின் ஆலோசனைக்கமைய சகல துறைமுகங்களின் பாதுகாப்பு பாதுகாப்புத் தொடர்பானதும், அவற்றை நடைமுறைப்படுத்துவதுமான அறிக்கை இலங்கை கடற்படையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரால் கையளிக்கப்பட்ட இந்த அறிக்கை சர்வதேச கப்பல் மற்றும் துறைமுகங்களின் பாதுகாப்பு விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டதாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

கொண்டிருந்தபோது இடம்பெற்ற இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது

வதிரி-திக்கம் வீதியில் அல்வாய் மானாண்டிச் சந்தைக்கு அண்மையில் கடும்மழை பெய்து கொண்டிருந்த போதே- ஹையேஸ் வான் மின்கம்பத்துடன் மோதியது.

இந்தவிபத்தில் முன்ஆசனத்தில் அமர்ந்து பயணித்த அல்வாய் வடமேற்கு திக்கத்தில் வசிக்கும் இராசதுரை இராகவன் (வயது34) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சாரதி மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலத்தினை பொலிஸார் மந்திகை மருத்துவமனையில் ஒப்படைத்தனர். பதில் நீதிவான் குமாரசாமி சடலத்தைப் பார்வையிட்டதுடன், வான் சாரதியைக் கைது செய்து விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (12,17)

(கொழும்பு)

சர்வதேச கரையோரப் பாதுகாப்பு அமைப்பின் வழிகாட்டல்களுக்கு அமைய - நாட்டிலுள்ள முகிய துறைமுகங்களின் பாதுகாப்பு, கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள சகல துறைமுகங்களின் பாதுகாப்புத் தொடர்பான அறிக்கையை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் போக்குவரத்து துறைமுகங்கள் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

இந்த அறிக்கை கையளிப்பு நிகழ்வில் விமானப் போக்குவரத்து துறைமுகங்கள் அமைச்சின் தலைவர் திலீப விஜயசுந்தர, முகாமைத்துவ பணிப்பாளர் டபிள்யு. ஜி.சமரதுங்க ஆகியோரும் உடனிருந்தனர்.

இதேவேளை - இந்த நிகழ்வில், அமைச்சர் மங்கள சமரவீரவின் ஆலோசனைக்கமைய சகல துறைமுகங்களின் பாதுகாப்பு பாதுகாப்புத் தொடர்பானதும், அவற்றை நடைமுறைப்படுத்துவதுமான அறிக்கை இலங்கை கடற்படையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரால் கையளிக்கப்பட்ட இந்த அறிக்கை சர்வதேச கப்பல் மற்றும் துறைமுகங்களின் பாதுகாப்பு விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டதாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் குறித்து

# நோர்வேயுடன் பேசிவருவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு!

வடக்கு - கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவது தொடர்பாக நோர்வே அரசாங்கத்துடன், தான் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும், நோர்வே அரசாங்கமும் இணக்கப்பாட்டுடன் கூடிய நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும், நேற்றிரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்ததாக இரா. சம்பந்தன் 'நமது ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

நேற்று இரவு 8.30 மணியிலிருந்து சுமார் 3 மணி நேரம் இடம்பெற்ற இந்த சந்திப்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால வரைபின் அடிப்படையில் பேசத் தயாராக இருப்பதாவும், ஆனால் அது தொடர்பாக முதலில் பேசி, ஒரு முடிவுக்கு வந்து அதன் பின் மற்றைய விடயங்கள் குறித்து பேசுவதாக நான் முன்வைத்த கருத்தை புலிகள் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் - நோர்வே நாட்டின் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது. அவர்களுடைய முயற்சியின் ஊடாக பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என நான் விரும்புகின்றேன்.

புலிகள் முன்வைத்த இடைக்கால யோசனையை நான் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அதன் அடிப்படையில் பேசத் தயார்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம். கடந்த 55 வருடமாக நாம் ஏமாற்றப்பட்ட ஒரு இனம். எந்தவொரு சிங்களத் தலைவர்களிலேயோ, சிங்கள அரசிலோ நம்பிக்கை வைக்கக்கூடிய நிலையில் இல்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க படைத்தளபதி பலகல்லவுடன் பேச்சு!



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப். ஜெனரல் ஜேம்ஸ் எல்.கம்பெல், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவை நேற்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவின் அலுவலகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்புக்கு முன்னதாக - அமெரிக்கத்

(12 ஆம் பக்கம் பார்க்க)


எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297,
077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

(சி/2489)

EXPOAIR
Your friend in the skies...

# மக்கள் குழுக்கள் அமைப்பு

பிரதேச ரீதியாக மக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக சுதுமலை, தாவடி, சாவற்கட்டு ஆகிய இடங்களில் தாரகா, சூரியா, பூந்தளிர் மகளிர் இளையோர் ஒன்றிணைந்து நாளை மறுதினம் காலை மக்கள் சிறு குழுக்களின் தெரிவுகள் இடம்பெறவுள்ளது.

கியூடெக் நிறுவன ஏற்பாட்டில், சுதுமலை சனசமூக நிலையத்தில் நடைபெறவுளள இந்தநிகழ்வில், கியூடெக் நிறுவன இணைப்பாளர் ஜோசப் பாலா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளதாக விழா ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (91)


## இதய நெகிழ்வுகளில் இணைந்து கொள்வோம்

மாவிட்டபுரம் - தென்மராட்சி - நுணாவில் மத்தி

**அமரர் கந்தையா மகேஸ்வரன்**

B.sc Dipin Ed. (ousl)

06.06.2004 இல் இறைவனுடன் இணைந்துள்ளார். இதனால் துயர்படும் அவரது இல்லத்தரசி, மக்கள், சுற்றம், சூழலுடன் இணைந்து கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி

'சிவசாந்தி',
நுணாவில் மத்தி,
தென்மராட்சி.

மனநெகிழ்வுடன்,
வே.கெ.தனபாலன்,
ஆசிரியர். (756)


# கஷ்ரப் பிரதேச பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கத் திட்டம்!

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கலாசாலையில் இருந்து வெளியேறும் ஆசிரியர்கள் தமது வலயத்தில் தேவைக்கேற்ப உள் வாங்கப்பட்ட பின்னர், ஒப்பந்த அடிப்படையில் கஷ்ரப்பிரதேச பாடசாலைகளில் பணிக்கு அமர்த்த கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தற்போது ஆசிரியர் கலாசாலையில் இருந்து வெளியேறும் மாணவர்கள் தமது வலயங்களில் பணியாற்ற விரும்புகின்ற காரணத்தினால் குறிப்பிட்ட பகுதிகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இந்த விடயத்தினை கருத்தில் கொண்டு, தமிழர் ஆசிரியர் சங்கம், ஆசிரிய கலாசாலையில் இருந்து வெளியேறும் மாணவர்களில், தமது கல்வி வலயத்தில் துறைசார்ந்த கற்பித்தலில் மிகுதியாக இருக்கும் ஆசிரியர்களை கஷ்ரப்பிரதேசத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கற்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய ஒவ்வொரு வலயத்தையும் சேர்ந்த ஆசிரியர் கலாசாலையில் இருந்து வெளியே றும் 60 வீதமான ஆசிரியர் கஷ்ரப் பிரதேசத்தில் பணியாற்ற வேண்டிய தேவை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(சுதுமலை)

இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தில் முழுநாள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் காலை கியூடெக் நிறுவனச் சமாதானக்குழுவின் ஏற்பாட்டில் இந்தக் கிராம மக்கள் மத்தியில், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கியூடெக் நிறுவன இணைப்பாளர் ஜோசப் பாலா கருத்துரை வழங்கவுள்ளதாக கியூடெக் நிறுவன சமாதானக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (91)

## சிறுவர்களின் நாடகப்போட்டி

சிறுவர்களின் நாடகப்போட்டி நாளை காலை 9.00 மணிக்கு கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நடைபெறவுள்ளதாக ஆரம்ப உதவிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். போட்டிகள் இரு இடங்களில் நடைபெறும்.

பருத்தித்துறைக் கோட்டம் யா/வடமராட்சி இந்துக் கல்லூரியிலும், கரவெட்டிக் கோட்டம் யா/திரு இருதயக்கல்லூரியிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. போட்டிக்கு விண்ணப்பித்துள்ள சகல பார்டசாலைகளும் போட்டியில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார். (13)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களம் - யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் தொடர் 81 இன்று மாலை நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாலை 5.30 மணியளவில் இந்து, சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறும். இந்தநிகழ்வில், 'பெண்களும் சமயவாழ்வும்' எனும் விடயத்தில் பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி கோதை நகுலராஜா சொற்பொழிவாற்றவுள்ளார்.


## மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாணசபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

## கேள்வி கோரல் - இல 03

## பாடசாலை மரத்தளபாடங்கள் கொள்வனவு

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்பு திட்டம் (கார்ப்) ஆகு செலவு சார்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து நன்கொடை ஒன்றிற்கு இலங்கை அரசாங்கம் விண்ணப்பித்துள்ளது. கீழேயுள்ள அட்டவனையில் விபரிக்கப்பட்டுள்ள பாடசாலை மரத்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்நன்கொடையின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பநதங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இல. | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் | கூறுவிலை பிணைப்பணம் |
|---|---|---|---|
| 01 | கிளி/கார்ப்/ஈடி/01/01 | 2000/- | 30,000/- |
| 02 | திரு/கார்ப்/ஈடி/13 | 2000/- | 23,000/- |
| 03 | மட்/கார்ப்/ஈடி/03/01 | 2000/- | 20,000/- |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்விகள் கோருவதற்கு தகுதிவாய்ந்தவர்களாவார்கள்.
   i. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான கேள்விகோருபவர், கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தத்தை திருப்திகரமாக முடித்திருக்க வேண்டும். போதியளவு தொகையிலான பாடசாலை மரத்தளபாடங்களை உற்பத்தி செய்யும் ஒரு தச்சுவேலை அல்லது வில் காய்ச்சியொட்டுதல் வேலைத்தளத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளராக இருக்க வேண்டும் என்பதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பதை நிருபிப்பதற்கான சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றார்.
   ii. ஒப்பந்தம் ஒன்றைக் கையாள்வதற்கு கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் தொழிற்படுத்தல் மூலதனம் உள்ளதென நிருபிக்க வேண்டும். இதற்கு மாற்றீடாக, கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் கொண்ட தொகையொன்றுக்கு இலங்கையில் உள்ள மதிப்பு வாய்ந்த வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற கடன் வழங்கப்படும் என உத்தரவாதம் பெற்ற கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்தகைய கடன் சான்றானது திட்டப்பணிப்பாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதம் என்ற அமைப்பில் இருக்க வேண்டும் என்பதுடன், கேள்வி கோருபவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால், மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு பிரத்தியேகமாக இக்கடனை வழங்கும் என அக்கடிதத்தில் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
   iii. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

04. ஒப்பந்தகாரர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு கேள்வி கோரலாம். ஆனால், இத்திட்டத்தின் கீழ் ஒரு கேள்விதாரருக்கு ஒரு ஒப்பந்த வேலை மட்டுமே வழங்கப்படும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப் படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), 140 மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலுள்ள திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 026-2227434 தொலைநகரி : 026-2227401 மின்னஞ்சல் necord@sltnet.lk

06 கேள்வி ஆவணங்களை 2004 ஜீன் 14 ஆம் திகதியிலிருந்து 2004 ஜீன் 24 ஆம் திகதி வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, இது தொடர்பாக பந்தி 2 இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திக் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் தலைவர், கருத்திட்ட கேள்விச்சபை NECORD, 140 மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் குறிப்பிட்ட பிணைப்பணம் அடங்கலாக 2004 ஜீலை 01 ஆம் திகதி பிற்பகல் 2.30 க்கு முன்பதாக கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். இதன்பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

08. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு 1 வாசகம் ii இல் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணத்தில், இது தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

09. சகல கேள்வி ஆவணங்களுடன் மேலே பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் காட்டப்பட்ட கூறுவிலைப் பிணைப்பணமும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்வி தாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

11. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் ஒவ்வொரு வகையான மரத்தளபாடங்களின் மாதிரிகள்ள தகுதிவாய்ந்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் செவ்வை பார்ப்பதன் பொருட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

த.லங்காநேசன்,
திட்டப்பணிப்பாளர்,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நிகொட்),
140, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.



## சிறு விளம்பரம்

**பனம் விதை சேகரித்தல் போட்டி - 2004**

ஐயாயிரம் பனம்பழ விதைகளைச் சேகரிப்பதில் ஆர்வமுடையவர்கள் எழுத்து மூலம் தொடர்பு கொள்க. விண்ணப்ப முடிவுத் திகதி: 30.07.2004. திருமதி. வே.கெ.தனபாலன், சிவதர்சினி பனம் பொருள் உற்பத்தி தனியார் நிறுவனம், நுணாவில் சாவகச்சேரி. (758)

**ராஜா** யாழ்ப்பாணம்.

3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா
நடித்த
ஆய்த எழுத்து



காட்சிநேரம்:-10.30, 2.30,6.30 மட்டும் (பு.நே)
(சி-2623)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜீன், ரம்பா, ஆனந்தராஜ்
நடித்த
அடிமைச் சங்கிலி
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
INTREPID
(சி-2621)

**நாகம்ஸ்** சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ்
நடித்த
கில்லி
(றீல்ஸ்)



தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00
(சி-2622)

# சர்வதேசம் இன்று வன்னிக்கு வந்திருப்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியே

## தளபதி கேணல் சூசை தெரிவிப்பு



இன்றைய சமாதானச் சூழ்நிலையினை ஏற்படுத்தித் தந்தவர்கள் மாவீரர்கள் என்ற உண்மையை யாரும் மறுக்கமுடியாது என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்ற மாவீரர் வீரவேங்கை சுகு நினைவான கணினிக் கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இன்று புலம்பெயந்த நாடுகளில் வாழ்கின்ற ஈழத்தமிழர்கள் மதிக்கப்படுவதற்கும், கௌரவிக்கப்படுவதற்கும், நிரந்தரமாக வாழ்வதற்குமான சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்திருப்பது தமிழீழ விடுதலைப் போராட்டம் தான்.

18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்ட விடுதலை, தியாகங்களால் தான் சர்வதேசரீதியாக ஈழத் தமிழர்களை உயர்நிலையில் பார்க்கின்றார்கள்.

1995 ஆம் ஆண்டு ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் ஒன்றாக யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வந்தபோது, திரும்பிப் பார்க்காத சர்வதேசம் - இன்று வன்னிக்கு வந்திருப்பதன் காரணம் - தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியே. வெற்றிக்கான அடிக்கல்லை நாட்டியவர்கள் மாவீரர்களே.

ஜயசிக்குறு, ஓயாத அலைகள் **I, II, III** நடவடிக்கைகளின் வெற்றிகளுக்கெல்லாம், அக்காலப் பகுதிகளில் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆளுகையின் கீழிருந்த வன்னிப் பகுதியிலிருந்த மூன்று இலட் சம் மக்களிடம் இருந்துதான் போருக்கான படைத்திரட்டல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அரசு ஒன்ற ரைக்கோடி மக்களிடமிருந்து படைத் திரட்டலை மேற்கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதலை மேற்கொள்ள முன்வந்து தோல்வி கண்டது.

மட்டக்களப்பில் இடம்பெறும் படுகொலை சம்பவங்களுக்குப் பின்னணியில் படைத்தரப்பு செயற்பட்டு வரும் நிலையிலும், சமாதான நடவடிக்கைகள் சுமுகமாக இடம்பெறுகிறது. இந்த நிலைப்பாடுகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளிக்கொணரவேண்டும்.

இவ்வளவு காலமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியான வெற்றியை சர்வதேசத்துக்கு எடுத்துரைத்தார்கள். இன்றைய சூழலில் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் அரசியல்ரீதியாக அரசாங்கத்தின் நிலை, எதிர்க்கட்சிகளின் நிலை உள்ளிட்ட ஒவ்வொருவருடைய முகத்திரையையும் வெளிக்காட்டும் வகையில் செயற்படல்வேண்டும்.

முன்னதாக வித்தியானந்தா கல்லூரி அதிபர் கே.கணேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை ஏற்றிவைத்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சைச் சேர்ந்த விசாகலிங்கம் கட்டட நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். கட்டடத்திற்கான பெயர்ப் பலகையை ஓய்வுபெற்ற பாடசாலை முதல்வர் சிவக்கொழுந்து திரைநீக்கம் செய்து வைத்தார்.

நிகழ்வின் சிறப் புரையினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையும், கருத்துரைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், வடக்கு- கிழக்கு கல்வியமைச்சைச் சேர்ந்த விசாகலிங்கம், முல்லை வலய கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, புலிகளின்குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் உள்ளிட்டோர் நிகழ்த்தினர்.

## வருடாந்த மஹோற்சவம்

சித்தங்கேணி தனுவோடைப் பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிவசிதம்பரஸ்வரம் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (91)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஜூலை மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

## சுமங்கள தேரர் ஏசியதாக ஆளும் கட்சி எம்.பி. முறைப்பாடு

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தமது கௌரவத்தைப் பாதிக்கும் வகையில், ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ சுமங்கள தேரர் - தகாத வார்த்தைகளால் ஏசியதாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே சபாநாயகரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இந்த முறைப்பாடு செய்யப்பட்டது. இதே வேளை தம்மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பாக, ஜாதிக ஹெல உறுமய அரசாங்கக் கட்சியின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது முறைப்பாட்டைச் செய்துள்ளது.

இதன் காரணமாக தமது நாடாளுமன்றக் கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயுதங்களுடன் இருவர் மட்டக்களப்பில் கைது

(கொழும்பு)

மோட்டார் சைக்கிள்களில் வந்த இருவரிடமிருந்து ஒரு பிஸ்ரல், அதறகுரிய ரவைகள் 25, கிரனைட் 1, கையடக்கத் தொலைபேசி மற்றும் சயனைட்வில்லை என்பன கைப்பற்றப்பட்டதுடன், அந்த இருவரும் கைது செய்யப்பட்டதாக படைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்திலுள்ள கல்மடுப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

கே.ரமேஸ்குமார் மற்றும் கணேசன் - சுதர்சன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களைக் கல்குடா பொலிஸாரிடம் படையினர் ஒப்படைத்துள்ளனர். இவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளை விடுத்து, மேலும் ஒருவர் ஆயுதம் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்குடா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழுவுக்குத் அறிவிக்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்தது.

## நாடாளுமன்ற சம்பவத்தை கண்டித்து எதிர்க்கட்சிகள் கையெழுத்து வேட்டை

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கூடிய அனைத்து எதிர்க்கட்சிகளும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்து பொதுக் கையெழுத்துச் சேகரிப்பில் ஈடுபட்டன.

113 நாடாளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்தே இக்கையெழுத்து வேட்டை நடாத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியன இதுவரையில் இக்கையெழுத்துத் திரட்டலில் தமது கையொப்பங்களை இட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் ஜனநாயக விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் இந்தக் கையெழுத்துக்கள் அடங்கிய மனுவை ஜனாதிபதியிடமும், சபாநாயகரிடமும் எதிர்க்கட்சியினர் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் இந்தப் பொது எதிர்க்கட்சி அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றையும் கொண்டு வரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## துப்பாக்கிகள் சகிதம் நால்வர் கைதாகினர்

கல்கிசைப் பகுதியில் ஹோட்டல் ஒன்றிலிருந்த நான்கு பேரை இரண்டு துப்பாக்கிகள் சகிதம் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த துப்பாக்கிகளில் ஒன்று - அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவிலிருந்து காணாமற் போயிருந்ததாக, திட்டமிட்ட கொலைகள் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் நாயகம் அல்விஸ் விஜயவர்த்தன தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் பல கொலை, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். மொறட்டுவப் பகுதியிலுள்ள பிரபல பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் ஒருவரின் கொலையுடன் இவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது.

அத்துடன், அவர்களிடமிருந்த துப்பாக்கி ஐந்து வருடங்களுக்கு முன்பு பாதுகாப்பு பிரிவிலிருந்து திருடப்பட்டிருந்தது என்றும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கும் உண்டு. அதுபோல மலையக மக்களுக்கும் வழங்க வேண்டும். அதுவே இன்றைய அவசரத் தேவையாகும் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஹற்றன் நகர சதுக்கத்தில் நடைபெற்ற பேரணியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

வடக்கு-கிழக்கில் தனிநாட்டுக் கோரிக்கை இயல்பாகத் தோன்றியதல்ல. அது அரசியலரீதியாக காலதகாலம் காட்டப்பட்ட பாகுபாடும், தரப்படுத்தலுமே காரணமாகும். இதனால்தான் நாட்டின் ஒருமைப்பாடு சீர்குலைந்து யுத்தம் தோன்றியது.

இதனால் பாரிய பொருளாதார நெருக்கடி நாட்டிற்கு ஏற்பட்டது. ஆகையால் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து இன மக்களுக்கும், ஒரே மாதிரியான உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட வேண்டும்.

ஒரே நாட்டு மக்களுக்கு வித்தியாசமான நடைமுறை உரிமைகளை வழங்கும் நடைமுறைக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்.

வடக்கு-கிழக்கு மற்றும் தென் பகுதி மக்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேண்டும். ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் சுதந்திரமாகப் பேசவும், வாழவும் அந்தப் பிரதேசத்தில் சகல உரிமைகளும் இருககுமானால், அதுவே உண்மையான சமாதானம் உருவாக வழியை ஏற்படுத்தும்.

சிங்கள மக்கள் மத்தியில் வாழ்கின்ற மக்களின் உணர்வும், வடக்கு-கிழக்குப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு அந்த மண் சொந்தமென்பதையும், சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. என்பதை எடுத்துக்காட்ட வேண்டியது எமது கடமையாகும்.

பெரும்பான்மை மக்கள் மத்தியில் மனமாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் நிலையான சமாதானத்தைக் கொண்டுவர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தேரரின் பதவிப் பிரமாணத்தால் நீதித்துறை சார்ந்தோருக்கு அதிர்ச்சி

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான அக்மீமன தயாரத்ன தேரர் - நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்வதைத் தடுப்பதற்கு, நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்த போதிலும், குறித்த தேரர் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டமை, நீதித்துறை சார்ந்தோரை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

தன்னைப் பலவந்தப்படுத்தி நாடாளுமன்றப் பதவியிலிருந்து விலகுமாறு கூறியதாக, ஹெல உறுமயவின் முன்னாள் எம்.பி. கரலுவே ரத்னசீக தேரர் - அந்தக் கட்சியின் ஐந்து சிரேஷ்ட உறுப்பினர்களுக்கெதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

ஹெல உறுமயவின் செயலாளர் சம்பிக்க ரணவக்க, ஓமல்பே சோபித தேரர், கொலன்னாவ சுமங்கல தேரர், உடுவே தம்மலோக தேரர், அக்மீமன தயாரத்ன தேரர் ஆகிய ஐந்து உறுப்பினர்களும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கினை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிவான் இடைக்கால தடையுத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தார்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளான ஐவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக சத்தியப் பிரமாணம் செய்தல், நாடாளுமன்ற சபைக்குச் சென்று அமர்தல், சபை வாக்கெடுப்புக்களில் கலந்துகொள்ளல், சபைக்கு சமுகமளித்து சபை நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்றவற்றுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதேவேளை இந்த தடை உத்தரவை மீறிச் செயற்படுவோர் மீது நீதிமன்ற அதிகாரத்தினை அவமதித்ததன் பேரில் தண்டனை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நீதிமன்ற தடையுத்தரவைமீறி அக்மீமன தேரர் பதவிப் பிரமாணம் செய்தது, நீதித்துறை சார்ந்தோரை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருப்பதாக நீதித்துறை சார்ந்தோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொள்ளையர்கள் இருவர் பலி

பத்ரமுல்லை பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தார். அத்துடன் அக்கோஷ்டியைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஓட்டோ ஒன்றை கடத்திக் கொண்டு மற்றுமொரு கொள்ளையை நடத்துவதற்காக இந்த கோஷ்டி சென்ற வேளையிலேயே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப்பெற்ற பின்னரே பொலிஸார் இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டதாக, நுகேகொட பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் தயானந்த பண்டார தெரிவித்தார்.

இந்த கொள்ளைக் கோஷ்டியினர் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களெனவும் அவர் தெரிவித்தார். இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## ஹொலண்ட் சுற்றுப்போட்டியில்

# இந்திய-பாகிஸ்தான் அணிகள் முதல் ஆட்டத்தில் மோதும்!

ஹொலண்டில் நடைபெறும் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் இந்திய- பாகிஸ்தான் அணிகள் மோத வுள்ளன.

இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் சுற்றுப்பயணத்திற்கு பிறகு நீண்டநாள் ஓய் வில் இருக்கிறது. அடுத்த மாதம் இலங் கையில் நடைபெற இருக்கும் ஆசியக்கோப்பை போட்டியில் இந்தியா விளையாடும்.

ஒகஸ்ட் மாதம் ஹொலண்டில் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டி நடைபெறும். இதில் இந் தியா, அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் அணி கள் விளையாடவுள்ளன. இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா ஒருமுறை மோதவேண்டும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும்.

3 நாடுகள் போட்டியின் தொடக்க ஆட் டத்தில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இந் திய அணி சமீபத்தில் பாகிஸ்தான் மண்ணில் டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கிலும், ஒரு நாள் தொடரை 3-2 என்ற கணக்கிலும் கைப்பற்றி இருந்தது.

1999 ஆம் ஆண்டு நடந்த உலக கோப் பையில் ஹொலண்ட் அணி விளையாடியது. இதன் காரணமாக அங்கு இந்தப் போட்டி நடத்தப்படுகின்றது.

இந்தப் போட்டிக்கு பிறகு இந்திய அணி செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்துடன் 3 ஒரு நாள் போட்டியில் விளையாடவுள்ளது. பின் னர் அந்த மாதம் கடைசியில் அங்கு நடை பெறும் ஐ.சி.சி சாம்பியன் போட்டியில் பங் கேற்கிறது.

அக்டோபர் - நவம்பர் மாதங்களில் அவு ஸ்ரேலியாவுடனும், நவம்பர் - டிசம்பர் மாதங்களில் தென்னாபிரிக்காவுடனும் இந்திய அணி சொந்த மண்ணில் விளையா டும்.

ஹொலண்டில் நடைபெறும் 3 நாடுகள் போட்டி விபரம்வருமாறு -

**ஓகஸ்ட் - 21 இந்தியா - பாகிஸ்தான்.**
**ஓகஸ்ட் - 23 இந்தியா - அவுஸ்ரேலியா.**
**ஓகஸ்ட் - 25 பாகிஸ்தான் அவுஸ்ரேலியா.**
**ஓகஸ்ட் - 28 இறுதிப்போட்டி.**

## ரஷ்ய வீராங்கனை உலக சாதனை!



செக் குடியரசு நாட்டில் நடந்த சர்வதேச தடகள போட்டியின் கம்பு ஊன்றி உயரம் தாண்டுதல் பிரி வில் ரஷ்ய வீராங் கனை டிராகிலா 4.83 மீற்றர் உயரம் தாண்டிப் புதிய சாதனை படைத் தார்.




# பாகிஸ்தானுடனான தொடர் இந்த ஆண்டில் இல்லை

## இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்த ஆண்டு கடைசியில் இந்தியாவுடன் ஒரு நாள் தொடரில் விளையாடும் என்று, ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இந்தத் தொடர் இந்தியாவிலோ அல்லது சார்ஜாவிலோ நடைபெறலாம் என்று கூறப்பட்டது. ஆனால், பாகிஸ்தானுடன் இந்த ஆண்டில் ஒருநாள் தொடரில் விளையாட வாய்ப்பு இல்லையென்று இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் டால்மியா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறும் போது, இந்திய அணி பாகிஸ்தானுடன் விளையாட காலநேரம் இல்லை. இதனால், இந்திய - பாகிஸ்தான் ஒருநாள் தொடர் நடைபெறாது.

ஒக்டோபர் மாதம் அவுஸ்ரேலிய அணி இந்தியா வருவதாலும், நவம்பர் மத்தியில் தென்னாபிரிக்க அணி வருவதாலும் பாகிஸ்தானுடன் இந்தியா விளையாட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# ஆர்மேனிய செஸ் போட்டி; உலக அணிக்கு ஆனந் கப்டன்



புதுடெல்கி, ஆர்மேனியா அணிக்கு எதிரான செஸ் போட்டியில், உலக அணியின் கப்டனாக இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் உலக செஸ் சாம்பியனான ஆர்மே னியாவின் டிக்ரன் பெட்ரோசியனின் 75 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஸ் போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

இதில் 6 வீரர்கள் அடங்கிய செஸ் ஆப்வேர்ல்ட் அணி, ஆர்மேனிய அணியை எதிர்த்து விளையாடுகின் றது. உலக அணியின் கப்டனாக, உலகின் இரண்டாம் நிலை வீரரான இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

இவருடன் மைக்கல் அடம்ஸ், பீற்றர் சிவில்டர், லோக்வான் வேடின், எட்டனி, பகோவலிஜோ ஆகிய உலகின் ஐந்து முன்னணிவீரர்களும் அணியில் இடம்பெற் றுள்ளனர்.

இவர்களை எதிர்த்து விளையாடக்கூடிய ஆர்மேனிய அணியில் ஆர்மேனியாவைச் சேர்ந்த உலகின் முதல் நிலை வீரரான, கரி கஸ்ப்ரோவ், விளாடிமிர் அகோபியன், ம்பாட் புடின், ராபில் வகானியன், பீற்றர் லீகோ, ஸ்ராலி போரிஸ் ஜெல்பான்ட் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

# இலங்கையுடனான டெஸ்ட் அவுஸ்ரேலிய அணியில் மாற்றம்



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்டில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் ஜூலை முதலாம் திகதி டார்வின் நகரில் தொடங் குகிறது.

இலங்கைத் தொடருக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக் கப்பட்டுள்ளது. சுழற்பந்து வீச்சாளர் மெக்ஹில் அணியில் இருந்து மீண்டும் நீக்கப்பட்டுள்ளார். புதுமுக வீரராக ஷாவன் டயித் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய அணி வருமாறு-

ரிக்கிபொண்டிங் (கப்டன்), லாங்கர், ஹைடன், மார்ட்டின், லீமன், சைமன் காடிச், கில்கிறிஸ்ட் வோர்ண், ஜிலெஸ்பி கஸ்பரோவிஸ், மெக்ராத், பிரட்வில்லியம்ஸ், ஷாவன் டயித்.

# பத்தாயிரம் மீற்றர் ஓட்டத்தில் பெகலே மீண்டும் உலகசாதனை

ஹொலந்து நாட்டில் உள்ள ஹென் கெலோ நகரில் கடந்தமாதம் 31 ஆம் திகதி சர்வதேச தடகளப்போட்டியின் 5 ஆயிரம் மீற்றர் தடகளப் பிரிவிலும் ஜெபர்ஸ்லேயின் சாதனையை முறியடித்து இதே நெனிசா உலகசாதனை படைத்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இருமுறையும் பெகலேவிடம் உலக சாதனையைப் பறிகொடுத்த ஹெய்ல் ஜெபர்ஸ்லே தற்போது பெகலேவுக்கு பயிற்சியாளராக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.




பத்தாயிரம் மீற்றர் தடகளப் போட்டியில் எதியோப்பியாவின பெகலே உலக சாதனை படைததுள்ளார். இவர் சமீபத்தில் 5000 மீற்றர் தடை தாண்டும் போட்டியில் உலகசாதனை செய்திருந்தார்.

செக் குடியரசில் உள்ள ஆஸ்ட்ரோவா நகரில் கோல்டன் ஸ்பெக் சூப்பர் கிராண்ட் பிரிக்ஸ் தடகளப் போட்டிகள் நடக்கின்றன. 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் பந்தயப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இந்தத் தூரத்தை எதியோப்பியா நாட்டின் நெனிசா பெகலே 26 நிமிடம் 20.31 வினாடிகளில் கடந்து உலகசாதனை படைத்தார்.

இதற்கு முன் 1998 இல் மற்றொரு எதி யோப்பிய தடகள வீரர் ஹெய்ஸ் ஜெபர்ஸ்லே 26 நிமிடம் 22.75 வினாடிகளில் கடந்ததே உலக சாதனையாக இருந்தது.

## ஆசியக்கிண்ணப் போட்டியில் விளையாட

# அணியில் இணைத்துக் கொள்ளுமாறு அக்தர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

(பாகிஸ்தான்)

ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டிக் கான பாகிஸ்தான் அணியில் தன்னைத் தேர்வு செய்யுமாறும், தனக்கு ஓய்வு அளிக்க எடுத்த முடிவை மறு பரிசீலனை செய்யுமாறும் அந்த அணியின் அதி வேகப்பந்து வீச்சாள ரான சொகைப் அக்தர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெற விருக்கும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் டே ட்டிக்கான பாகிஸ் தான் அணியில் அக்தர் இடம்பெற மாட்டார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அறி வித்திருந்தது. காயம் காரணமாக அவதிப பட்டு வரும் அக்த ருக்கு ஓய்வு அளிக் கவே இந்த முடிவு என்றும், மேலும் முக்கிய போட்டிகளை கருத்தில் கொண்டு அக்தருக்கு இந்த ஓய்வு அளிக்கப்பட்டு இருப்பதாகவும் பாகிஸ்தான் கிரிக் கெட்சபை அறிவித்துள்ளது.



ஆனால் தான் முழு உடற்தகுதியுடன் இருப்பதாகவும், எனவே ஆசிய கோப்பைக் கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணி யில் தனக்கு ஓய்வு அளிப்பது குறித்த தேர்வுக்குழுவின் முடிவை மறுபரிசீலனை செய் யுமாறும் அக்தர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இங்கிலாந்து கவுண்டி கிளப்பான டுராம் கிளப்பிற்காக தற்போது விளையாடி வரும் அக்தர் இது குறித்து கூறுகையில், "எனக்கு ஏற்பட்டுள்ள காயத் தில் இருந்து நான் அடைந்துள்ள முன் னேற்றம் திருப்தி அளிப்பதாக உள்ளது. இந்தக் காயத் தால் எனக்கு கடுமை யான பிரச்சினை தற் போது இல்லை. எனவே என்னைத் தேர்வு செய்ய வேண் டாம் என்று கிரிக்கெட் சபைக்கு, தேர்வுக் குழு கூறிய ஆலோசனையை மறு பரிசீ லனை செய்தால் ஆசியக் கோப்பையில் விளையாட ஆவலுடன் இருக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

டுராம் அணிக்காக அக்தர் விளையாட ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து அக்தர் கூறுகையில் "தற்போது நான் பந்து வீசும் போது எந்த வலியும் ஏற்படுவதாக உணரவில்லை. ஏனெனில் ஸ்பெஷலிஸ்டுகள், பயிற்சியாளர்க ளின் உதவியுடன் நான் நல்ல முன்னேற்றம் அடைந்து வருகிறேன். ஒரு சகல துறை வீரராக பேசப்பட வேண்டும் என்பதே எனது விருப்பம் என்று அக்தர் கூறினார்.




**மண்டைதீவுக் கடற்பரப்பில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் நினைவாக பாடும்மீன் விளையாட்டுக்கழகமும், சூசையப்பர் விளையாட்டுக்கழகமும் நடத்திய கால்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட அணிக்கு சகாயநாயகம் அடிகளார் வெற்றிக்கிண்ணத்தினை வழங்குவதை படத்தில் காணலாம்.**

# நடேசனின் கொலை தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை!

## பிரபல ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஜி.நடேசன் கொலை செய்யப்பட்டு ஒருவாரம் கடந்த நிலையிலும், அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையப்பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்களின் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது-

ஊடகவியலாளர் நடேசனின் கொலையைக் கண்டித்தே இன்றைய தினம் தமிழ், சிங்கள ஊடகவியலாளர்களாகிய நாம் ஆர்ப்பாட்டத்தினை நடத்துகின்றோம்.

நடேசன் கொலை செய்யப்பட்டு ஒருவாரகாலம் கடந்துள்ள நிலையில், அரசாங்கம் இந்தக் கொலை தொடர்பாக எந்தவொருதிடமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

றிச்சட் டி சொய்சா, றோகண குமார, நிமலராஜன், நடேசன் போன்ற பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதும் உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இத்தகைய கொலைகளுக்குக் காரணமானவர்கள் சரியான தண்டனை பெறுவதனூடாகவே ஏனையோரும் ஊடகவியலாளர் மீது வன்முறையைப் பிரயோகிக்க அஞ்சுவர்.

ஊடகவியலாளர்கள் நாட்டின் எந்தப்பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

அரசும், விடுதலைப் புலிகளும், ஏனைய ஆயுதக்குழுக்களும் இதற்கான உத்தரவாதத்தினை வழங்குதல் வேண்டும். ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும். ஊடகவியலாளர்கள் தமது கடமைகளைச் சுயாதீனமாக முன்னெடுக்க எந்தத் தடையும் இல்லாத நிலை உருவாக வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

(மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கருத்து தெரிவிக்கையில்)

ஊடகவியாலளர்கள் ஜனநாயகத்தின் ஆணிவேர்கள். அவர்களது செயற்பாடுகளுக்கு அரசு சரியான ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

உலக நாடுகளிலும், இலங்கையின ஊடகவியலாளர்கள் உண்மையை வெளிப்படுத்த முற்படுகின்றபோது, பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது ஜனநாயகத்திற்கு மாறானது. ஒருபோதும் இத்தகைய செயல்கள் நீடித்த தன்மையை யாருக்கும் ஏற்படுத்தாது. இத்தகைய செயலில் ஈடுபடுவோர் அழிவையே அடைவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



முதலாவது அகவையில்



பெயர் : கு. ரக்ஷனா
முகவரி : சுவிற்சர்லாந்து

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

## தற்கால அரசியலை நன்கு விளக்குவதாக 'பொது ஆட்சியியல்' நூல் விளங்குகிறது

### - பேராசிரியர் கிருஷ்ணராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொது ஆட்சியியல் நூல் தற்கால அரசியலை விளங்கிக்கொள்ள உதவும் சிறந்த நூல். இதனைப் பல்கலைக்கழக மாணவர் உட்பட அனைவரும்கற்றுக்கொள்ளவேண்டும் என யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் இணைப் பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பொது ஆட்சியியல் நூல் அறிமுகவிழா யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் நடைபெற்றபோது, அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இந்த நூலின் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக மிகவும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. காலத்துக்குக் காலம் இலங்கையில் தமிழ், சிங்கள சமூகத்துக்கு இடையே நிலவிய உறவுமுறைகள், சிக்கல்கள் முதலியன மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

இரண்டு ஆசிரியர்களின் தொகுப்பாக வெளிவந்துள்ள பொது ஆட்சியியல் என்னும் இந்த நூல் எமக்கு பல வகையிலும் பயன்படுமென நம்புகின்றோம். இலங்கை அரசியல் தொடர்பாக நாம் என்ன கருத்தினை முன்வைக்கலாம் எனச் சிந்தித்துக் கொண்டு இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் இந்த நூலில் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதற்கான எமது போராட்டம் நீண்டு செல்லப்போகின்றது என்பதை உணர முடிகின்றது.

இந்த நூல் மிகவும் பெரிய நூலாக வெளிவரக்கூடிய நிலையில் அடிப்படை தகைமையைக் கொண்டு இரண்டாவது பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூல் ஓர் ஆராய்ச்சி நூலாக அமையும். இனமுரண்பாடுகள் தொடர்வதற்கான காரணம், அதனை முடிவுக்குக் கொண்டுவர மேற்கொள்ளக் கூடிய சில யுக்திகளைக்கூட இந்த நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

(தீ)

## எரிபொருள் விற்பனை நிலையம் தீப்பிடித்து எரிந்து நாசமானது

உரும்பிராயில் எரிபொருள் விற்பனை நிலையம் தீப்பற்றி எரிந்ததில் உரிமையாளர் மோசமான தீக் காயங்களுக்கு உள்ளானார்.

இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தீ விபத்துச் சம்பவத்தில் எஸ். நிமலகாந்தன் என்பவரே எரிகாயங்களுக்கு உள்ளானவராவார்.

உரும்பிராய் பஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் புதிதாக திறக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையமே தீ விபத்தில் நாசமாகியது.

சம்பவதினம் கடையிலிருந்த 'ஹரிக்கேன்' விளக்கு சரிந்து பெற்றோல் போத்தல்களின் மீது விழுந்ததால் கடை தீப்பற்றி எரிந்தது.

இதனால், கடைமுற்றாக எரிந்து சாம்பலாகியுள்ள அதேசமயம், உரிமையாளர் கைகளிலும் கால்களிலும் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

காயமடைந்த கடை உரிமையாளர் சிகிச்சைக்காக, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## முருகானந்தனின் 'தரைமீன்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மல்லிகைப் பந்தல் வெளியீடான ச.முருகானந்தனின் 'தரைமீன்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி நகர கலைபண்பாட்டு மண்டபத்தில் அழகியல் கலாமன்றத்தினரின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

டொக்டர் சுஜந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை வே. பாலகுமாரனும், ஆய்வுரையை நா. யோகேந்திரநாதன், மணிமேகலை ஆகியோரும் நிகழ்த்துவர்.

அமரர் பொன் விநாயகமூர்த்திக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்ட பிரதியை அரச அதிபர் தி.இராசநாயகமும், அமரர் மு.கந்தசாமிக்கு சமர்ப்பணம் செய்யப்பட்ட பிரதியை கல்விப்பணிப்பாளர் க.அரியரத்தினமும் வழங்கிச் சிறப்பிப்பர்.

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பணிகள் இனி அரச கட்டுப்பாட்டின் கீழ்

வெடிபொருள் அகற்றும் செயற்பாடுகள் யாவும் அரச கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் இன நல்லிணக்கத்திற்கான அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கையில் வெடிபொருள் அகற்றும் பணிக்கு உதவிபுரியும் நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்த அதிகாரிகள் வெடி பொருட்கள் புதைக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு விரைவில் விஜயம் மேற்கொண்டு உண்மையான நிலைப்பாட்டை நேரில் கண்டறிவதுடன் மேலும், நிதியுதவி வழங்குவதற்கான பரிந்துரைகளைத் தமது நாடுகளுக்கு விடுக்கவுள்ளனர்.

இதுவரைகாலமும் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாகவே இந்த வெடிபொருள் அகற்றும்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

எனினும், சில சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அந்தப் பணியை அரசு பொறுப்பேற்றுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து லட்சம் வரையிலான வெடி பொருட்களும், வன்னியில் ஒரு லட்சத்துக்கும் மேலான வெடிபொருட்கள இன்னமும் அகற்றப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெடிபொருட்களை அகற்றுவதற்கு 12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இன்னமும் தேவைப்படுகின்றன. இந்தப் பணிகளை 2006 ஆம் ஆண்டுக்குள் நிறைவடையச் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

ஜப்பானிய அரசாங்கம் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி இந்த வெடிபொருள் அகற்றும் பணியைத் துரிதப்படுத்த உதவிபுரியவுள்ளது.

இதேபோல் ஏனைய பல ஐரோப்பிய நாடுகளும் இந்த வெடிபொருள் அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்த நிதி உதவி அளிக்கவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காவலாளியின் விளக்கமறியல் நீடிப்பு

சிறுவன் ஒருவனைப் பாலியற் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய மெதடிஸ்த திருச்சபை சிறுவர் விடுதியின் காவலாளியினது விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் நேற்றுமுன்தினம் யாழ். மேலதிக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, இவரது விளக்கமறியலை எதிர்வரும் 22ஆம் திகதி வரைக்கும் நீடிக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சிறி நிதி நந்தசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

## விளைத்திறன் தடைப்பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

(சுதுமலை)

மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன.

பிரதேச உள்ளூராட்சி உதவியாளர்கள் தோற்றிய இந்தப் பரீட்சையில் 64 பேர் சித்தியடைத்துள்ளனர். ஸ்தாபனக் கோவையும் நிதிப்பிரமாணமும், அரசியல் யாப்பும் மாகாண சபை பிரமாணங்களின் விதிகளும் என்ற இரு பாடங்களில் இடம்பெற்ற இந்தப் பரீட்சையில் 40 புள்ளிக்கு மேல் பெற்றவர்களே சித்திபெற்றவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளினது பெறுபேறுகள் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாகாண சேவை ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். (91)

### கவிதைத் திருவிழா

நல்லூர் தமிழ் சங்கத்தின் கவிதைத் திருவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இடம்பெறவிருக்கும் நூறு மலர்கள் மலரட்டும் என்ற கவியரங்கிற்கு கவிஞர் கோ.சி.வேலாயுதம் தலைமை வகிக்கவுள்ளார்.

இந்தக் கவியரங்கத்தில் 20 இளம் கவிஞர்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மானிப்பாய் பிரதேச

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை வழங்கப்படும்

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட 76 சனசமூக நிலையங்களுக்கும் 2003ஆம் ஆண்டிற்கான நன்கொடை நிதி காசோலையாக வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் தங்களது விபரங்களை சமர்ப்பிப்பதன் மூலம், வங்கியூடாக, நன்கொடை காசோலையாக வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

'ஏ' தர சனசமூக நிலையங்களுக்கு ஆயிரத்து 600 ரூபாவும் 'பி' தர சனசமூக நிலையங்களுக்கு ஆயிரத்து 400 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வருடமும் வழங்கப்பட்டுவரும் நன்கொடைக்கு இது வரை 50 சனசமூக நிலையங்களே தங்களது விபரங்களை அனுப்பி வைத்துள்ளனர். ஏனைய 26 சன சமூக நிலையங்களும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விபரங்களை அனுப்பி வைக்குமாறும் மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார்.

(91)

### சீருடைத்துணி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை சீருடைக்கு விண்ணப்பித்து இதுவரை அவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது கிராம சேவையாளர்களிடம் ஜுன் 15ஆம் திகதிக்கு முன்னர் அவற்றைப்பெற்றுக் கொள்ளுமாறு, யாழ். பிரதேச செயலாளர் அறியத்தந்துள்ளார்.

### வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டம் வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் ஜானகி விஸ்வநாதன் இயக்கத்தில் உருவான "கனவு மெய்ப்பட வேண்டும்" எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.




# பனை எமக்குக் கிடைத்த மூலவளம் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும்



ஒரு திருமண விழாவின்போது, கேக்கினைச் சிறிய கூடைக்குள் வைத்துக்கொடுத்தனர். அது எமது மூலப்பொருளாகிய பனையின் மதிப்பையும், எம் பண்பாட்டையும் நிலை நிறுத்தியிருந்தது. அப்போதுதான் எமக்கு இதைப்பற்றி அறிய ஆவல் ஏற்பட்டது. இவற்றைப் பழக்கும் ஆசிரியரைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அவரிடம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டபோது -

எனது பெயர் சிவபாக்கியவதி சற்குணநாதன் (வயது 39). எனக்கு 02 பிள்ளைகள் எனது கணவர் தோட்டம் செய்கிறார். நான் தற்போது வடக்குத் தோட்டம் சமரபாகு, வல்வெட்டித்துறையில் வசிக்கின்றேன்.

எமது குடும்பத்தில் 4 பெண்களும் ஒரு ஆண் சகோதரனும் இருந்தோம். நான் க.பொ.த சாதாரணம் படிக்கும்போது வீட்டில் வறுமைநிலை உருவாகியது.

அப்போது க.பொ.த சாதாரண பரீட்சை முடிந்து பெறுபேறுகளும் வந்தன. நான் படித்த காலத்தில் உயர் கல்வியைத் தொடர முடியுமாக இருந்த போதும் வீட்டு நிலமை என் உயர் கல்வியைப் பாதித்தது.

எமது அம்மா பெட்டி, பாய் போன்றவற்றை உற்பத்தி செய்துகொண்டிருந்தார். நாமும் அவருக்கு உதவிகளைப் புரிந்து அவரிடமிருந்து பெட்டி, பாய் செய்யும் முறைகளைக் கற்றுவந்தோம்.

முன்னய காலங்களில் வருமானங் கள் எதனையும் கருத்திற்கொள் ளாது இந்தக் கைப்பணி வேலைக ளைப் பழகவேண்டும் என்ற ஆர்வம் எமக்கு இருந்தது. ஆனால், தற்போது இருக்கும் யுவதிகள் ஒரு சுய தொழி லைப் பழகும்போதே இதனால் என்ன வருமானம் வரும் எனக் கணக்குப் பார்ப்பது எனக்கு வருத்தத்தைத் தரு கின்றது.

மேலும், பனை எமக்குக் கிடைத்த ஒருமூலவளம் அதனை சரியான முறையில் பயன்படுத்தினால் நிச்சயமாகப் பல வகையான நன்மைகளைப் பெறமுடியும். சில யுவதிகள் தற்போது வளர்ந்துவரும் நாகரீக மோகத்தில் மூழ்கி சிகை அலங்காரம், கேக் ஐசிங், தையல் போன்றவற்றை நாடிச்செல்கின்றனர். இந்தத் தொழில்கள் ஓர் பெருமைக்குரிய தொழில் எனவும் கருதுகின்றனர். அதற்காக மேற்குறிப்பிட்டவற்றை பழக வேண்டாம் என குறிப்பிடவில்லை, இவற்றையெல்லாம் பழகுவதற்கு கூடுதலான முதலீடுகளைச் செல வழிக்கின்றனர். இதைவிட சில பெண்கள் தையல் பழகி முடித்து வீட்டில் தையல் இயந்திரம் இல்லாமல் இந்தத் தொழிலை செய்ய முடியாமலும் இருக்கின்றனர்.

நான் இந்தக் கைப்பணி வேலையை பழகியபோது 75 ரூபா மட்டுமே எனக்கு கூடிய வருமானமாக இருந்தது. அதன் பின்னர் 1982 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் திக்கம் பனை அபிவிருத்திச் சபையினால் 3 மாதம் பயிற்சி எடுத்தேன். யமுனா புவனேசமூர்த்தி ஆசிரியையிடம் பயிற்சியை எடுத்து வந்தேன். அதன் பின்னர் தேசிய பயிலுநர் சபையிலும் 12 வருட காலம் பழகி, திக்கம் வடிசாலையில் உற்பத்தியாளராகவும் பணியாற்றிவந்தேன்.

எனது இரண்டு அக்காவும் திருமணம் முடித்த பிறகு 1987 ஆம் ஆண்டில் நடந்த இனக்கலவரத்தினால் 1990 ஆம் ஆண்டில் எனது தந்தையின் சுகவீனம் காரணத்தினால் எமது குடும்ப வருமானம் குறைந்தது.

நான் அப்போது குடும்பத்தில் மூத்தபிள்ளை ஆகையினால், குடும்பப் பொறுப்பும் என்னிடம் வந்தது. இறைவனை வேண்டி நான் பழகிய இந்தக் கைப்பணி வேலையை பெருமுயற்சியுடன் செய்தேன். இதனால், என் தங்கையை ஆசிரியாராகவும், தம்பியை பருத்தித்துறை பிரதேசத்திற்கு சிக்கன கடனுதவி கூட்டுறவு சமாசத்திற்கு வெளிக்கள உத்தியோகத்தராகவும் கடமை புரியுமளவிற்கு உயர்த்தி வளர்த்தது இந்தக் கைப்பணி வேலைதான்.

ஆரம்பத்தில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்த பாக்கியநாதன் எடுத்த முயற்சியால் எமக்கு கூடுதலான வருமானம் கிடைத்தது. 1990 ஆம் ஆண்டில் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் அமைப்பாளராகவும் தெரிவுசெய்யப்பட்டு இந்தியாவில் 3 வாரப் பயிற்சியும் எடுத்து வந்தேன். அதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட நிலையத்திற்கு இநதக் கைப்பணி பயிற்சியை வழங்கிவந்தேன்.

1992 தொடக்கம் 1995 ஆம் ஆண்டுவரை தொண்டர் ஆசிரியராகவும் 1000 ரூபா வருமானத்தில் கடமையாற்றினேன். 1997.04.02 இலிருந்து தற்போது மட்டும் பனை அபிவிருத்திச் சபையில் நிரந்தர ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றேன்.

இந்தத் தொழிலை அனைவருக்கும் பழக்க வேண்டும் என்ற நோக்கில் நாகர் கோயில் பிரதேசத்திற்கு சைக்கிளில் சென்று கூட பழககி வந்தேன். இது மட்டுமல்லாமல் தேசிய பயிலுநர் சபையினூடாக அச்சுவேலி, சாவகச்சேரி, நெல்லியடி போன்ற பிரதேசங்களிலும் பயிற்சிகளை கொடுத்துவந்தேன்.

பெண்கள் இந்தத்தொழில் பழகுவதைக் குறைத்தமைக்கு இன்னொரு காரணமும் உண்டு. முன்னைய காலத்தில் தேசிய பயிலுநர் சபை 450 ரூபா கொடுத்தது, அதன் பின்னர் 600 ரூபாவாக உயர்த்தி தற்போது 300 ரூபாவாக குறைத்துள்ளது. இதுவும் ஒவ்வொரு மாதமும் கொடுப்பதில்லை. அவர்கள் பழகி முடிந்த பிறகே இந்தக் காசு வந்து சேருகின்றது. இதனாலும் இதனைப் பழகுவதைக் குறைத்துக் கொள்கின்றனர்.

தற்போதைய A9 பாதை திறப்பினால் பல வெளிநாட்டவரின் வருகையால் இந்தக் கைப்பணி வேலைக்கு அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. கூடியவருமானமும் கிடைக்கின்றது. ஆனால், வெளிநாட்டின் வருமானத்தினால் இந் தத் தொழிலை செய்தவர்களும் கைவிடுகின்றார்கள். பழகும் பெண்களும் குறைந்து வருவது எனக்கு கவலையைத் தருகின்றது.

பயிற்சி பெற விரும்பும் பெண்கள் திக்கம் பனை அபிவிருத்திச் சபையிடம் ஒவ்வொரு பிரதேசத்திலும் குறிப்பிட்ட சிலரை சேர்த்த பின்னர் எமக்குக் கூறினால், நாம் பயிற்சி கொடுக்க தயாராக உள்ளோம்.

பனை எமக்கு இயற்கைதந்த அரும் பெரும் சொத்து அதனை தக்க முறையில் பழகினால், பெண்களாகிய எமக்கு எப்போதாவது ஏற்படும் கஷ்டங்களை நீக்கிக் கொளவதற்கும், எமது சொந்த காலில் நிற்பதற்கும் உதவும் எனக் கூறி தனது கருத்துப் பரிமாற்றத்தை முடித்துக்கொண்டார்.

நேர்காணல் - க.கனெக்ஸ்

# ஆண்களைவிட பெண்கள் கூடுதலாகப் பேசுகிறார்கள்



ஆணின் மூளையும், பெண்ணின் மூளையும் இயங்குவதே வித்தியாசமான முறைகளில்தான், ஆணின் மூளை சிந்தனைப் பார் வைக்குப் புலனாகும்ரீதியில் இயங்கும். ஆனால், பெண் மூளையோ புலனுக்குத் தென்படாத, மறைபொருளான (**Abstract terms**) ரீதியில் இயங்குகின்றது. அதாவது, பேசும்போது ஆண் உணர்ச்சியில் மனதைச் செலுத்தாமல் அதன் உட்பொருளில் கவனமாக இருப்பான் ஆனால் பெண்ணோ உணர்ச்சி வேகத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பாள்.

இந்த வித்தியாசத்தை உணர முடியாத பல ஆண்கள் - "இந்தப் பொம்பளைகளை புரிஞ்சுக்கவே முடியாதுப்பா" என்று புலம்பு வார்கள்.

பெண்களுக்கு இயல்பாகவே பேசுவதில் பெரிய இன்பம் ஏற்படுகிறது. ஏனெனில், அவர்களைப் பொறுத்தமட்டில் பேசுவது என்பது ஏதோ வெறும் ஒரு எண்ணத்தை வெளிப் படுத்துவது (**Personality**) என்பதல்ல. மாறாக அது அவர்களது தனிப் பண்பியல்புகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடு, அவர்களின் உணர்ச்சிகளுக்கு ஒரு வடிகால், ஏன்... அவர்களுக்கு அது ஒரு கலையும் கூட!

பெண்கள் மட்டுமே கூடிப்பேசும் நிகழ்ச்சிகளில் ஒருவருக்கொருவர் தங்கள் சொந்த வாழ்க்கைச் சமாச்சாரங்களையே அதிகம் பேசித்தீர்ப்பார்கள்! ஆனால், ஆண்கள் கூடிப் பேசும்போது சொந்த விடயங்களை மறந்து வேறு விடயங்களை பேசித்தீர்ப்பார்கள்.

பேசிச் செய்திப் பரிமாற்றம் செய்துகொள்வது இருக்கட்டும். பேசாமலேயே தங்கள் செய்கைகள், முகபாவனைகள், உடல் அசைவுகள் ஆகியவற்றில்கூட ஆணுக்கும், பெண்ணுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு.

ஆண்கள் பொதுவாய் அதிக அளவில் முகபாவனைகள் காட்டுவதில்லை. பெரும்பாலும் முகச்சுளிப்பு, புருவ நெளிப்பு போன்ற எதிரான உறுப்பசைவுகள்தான். ஆனால், பெண்களோ அதிக முகபாவனை காட்டுவார்கள். புன்னகை, ஆமாம் என்று ஆமோதிப்பது போன்ற தலையாட்டல்கள், கைவிரல் அசைவுகள் எல்லாம் நிறையவே இருக்கும்.

இருவருக்குமிடையே சரியாகப் புரிந்துகொள்ளும் தன்மை இருக்கவேண்டுமென்றால், ஒருவரது உடல் மொழியை முதலில் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

பிறர் பேசுவதைக் கவனித்துக் கேட்பது என்பதிலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்கும் அணுகுமுறைகள் வித்தியாசமா னவை.

பெண் ஒவ்வொன்றையும் மிக உன்னிப்பாகக் கவனிப்பாள், பேசுபவரின் குரல், அழுத்தம், அவரது உடல் அசைவுகள் ஆகியவை பகுதி பகுதியாய் அவளால் அலசப்படும். பொதுவாக பெண்களுக்கு தம் வாழ்க்கையில் ஒருவரையொருவர் சார்ந்திருப்பதும், ஒத்துழைப்பு தருவது தான் பிடிக்கும். பெண்கள் தங்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கும் ஒற்றுமைகளைச் சிந்தித்து அனைவரும் மகிழ்ச்சியாய் இருப்பதற்கான முடிவுகளை எடுப்பார்கள்.

ஆனால், ஆண்களோ தங்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசங்களை எண்ணிப் பார்த்து, தங்களது தேவைகள், விருப்பங்களுக்கு ஏற்றால்போல் முடிவுகளை எடுப்பார்கள். இவற்றின்படி, பெண்கள் பிற ருடனான உறவுகளைப் பலப்படுத்துவதில் கெட்டிக்காரர்கள். ஆண்கள் காரியங்களைச் செய்த முடிப்பதில் கெட்டிக்காரர். இதுதான் இருவருக்குமிடையே இருக்கும் வித்தியாசம் ஆகும்.

இந்த வித்தியாசமே, சிலவேளைகளில் விஸ்வரூபமெடுத்து பல கசப்பான அனுபவங்களுக்குக் காரணமாகிவிடுகிறது.

நீங்கள் பேசியதற்கு அவர்கள் சொல்லும் பதில் கோபத்தையோ, கசப்பையோ கிளறினால் உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள் நாம் சொன்னதைத் தவறாகக் கேட்டுக் கொண்டுவிட்டாரே என்று அது உறுதியாகிவிட்டால், உங்கள் கோபமோ, கசப்போ அர்த்தமற்ற தாகிவிடும். அதை உணர்ந்து விட்டால் தகராறுக்கே வழியில்லை. என்ன தான் சொல்லுங்கள்.

கணவனுக்கும், மனைவிக்குமிடையே உண்மையான ஆழ்ந்த நிஜமான காதல் மட்டும் இருந்துவிட்டால் எப்படி கொடிக்குக் காய் பாரம் இல்லையோ அதுபோல் எந்த விதமான பிரச்சினையும் அந்தக் காதல் கொடிக்கும் பாரமே இல்லை. ☆

## சிந்தனைத் துளிகள்

✷ இந்த உலகத்திலுள்ள பலரில் நீயும் ஒருவராயிருக்கலாம். ஆனால், யாராவது ஒருவருக்கு நீயே உலகமாய் இருக்கலாம்.

✷ சோகமாய் இருக்கும் தருணங்களிலும் நீ சிரித்துக்கொண்டே இரு. சிரிப்புக்காகவே உன்னை ஒருவர் நேசிக்கக் கூடும்.

✷ ஒரு நல்ல விடயம் முடிவுக்கு வந்துவிட்டதே என்று வருத்தப்படாதே. அது நடந்ததற்காக சந்தோசப்படு.

✷ கடவுள் வேண்டுமென்றேதான் ஒரு நல்ல மனிதரை சந்திக்கும் முன்பே கெட்ட மனிதர்களைச் சந்திக்கவைக்கிறார். அப்போதுதான் அந்த நல்ல சந்திப்புக்காக நீ அவருக்கு நன்றி செலுத்துவாய்.

✷ உன்னுடன் நேரத்தைச் செலவிட விரும்பாதவருடன் நீ உன் நேரத்தைச் செலவிடாதே.

✷ எத்தனையோ பெரிய விடயங்கள் நீ எதிர்பாராமலே நடக்கின்றன.

## இது பெண்களுக்கு...

☛ கணவன் வெளியே சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தவுடனேயே அவரிடம் பிரச்சினைகளைக் கொட்டித் தீர்க்காதீர்கள். சந்தோஷமாக எதிர்கொள்ளுங்கள்.

☛ கணவனிடம் விட்டுக் கொடுத்து வாழப்பழகிக் கொள்ளுங்கள்.

☛ மாமியார், மாமனார் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து முடிவுகளை கணவனுடன் கலந்து பேசி எடுங்கள்.

☛ கணவனின் வருமானத்திற்கேற்ப செலவு செய்வதற்குப் பழகிக்கொள்ளுங்கள். அடிக்கடி அதை வாங்கித் தரும்படி அடம்பிடிக்காதீர்கள்.

☛ கணவன் கோபமாக இருந்தால் பதிலுக்கு நீங்களும் கோபமாகப் பேசி பிரச்சினையைப் பெரிது படுத்தாமல் அவரின் மனமறிந்து விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். கொஞ்ச நேரத்தில் கோபமடங்கி நிலைமை சரியாகிவிடும்.

☛ கணவர் வேலையிலிருந்து வரும்போது, அக்கம் பக்கத்து அயலவருடன் அரட்டை அடிக்காமல் வீட்டிலிருக்க பழகிக்கொள்ளுங்கள். அத்துடன் அவரின் களைப்பை போக்க, குடிக்க தேநீர் அல்லது உணவு கொடுக்க தயாராகுங்கள்.



## இது ஆண்களுக்கு...

☛ கணவன்மார்கள் அடிக்கடி மனைவியிடம் உன்னை மாதிரி மனைவி கிடைப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என மனைவியைப் பெருமைப்படுத்துவதால் அவர்கள் இருவரும் மகிழ்ச்சியுடனும், சந்தோசத்துடனும் வாழ வழிசெய்கின்றது.

☛ மனைவியை வேலைக்காரியாக அடிமையாக நடத்தாதீர்கள் நண்பியுடன் பழகுவதுபோல பழகுங்கள்.

☛ எவ்வளவு தான் உயர்பதவியில் இருந்தாலும் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாதபோது அருகிலிருந்து அக்கறையாக ஆதரவாகக் கவனியுங்கள்.

☛ வீட்டிற்கு வரும் மனைவியின் உறவினர்களை மதித்து அவர்களோடு பேசிப்பழகி, முடிந்தவரை உதவிகள் செய்தால் மாமனார் வீட்டில் உங்கள் கௌரவம் பல மடங்கு அதிகமாகும்.

☛ வாரத்தில் ஒரு நாளாவது மனைவிக்கு விடுமுறை கொடுத்து அவளின் வேலைகளை நீங்களே கவனியுங்கள்.

☛ மனைவியின் பிறந்த நாளை ஞாபகம் வைத்து எதிர்பார்க்காதவாறு பிடித்ததை வாங்கிக் கொடுத்து அசத்துங்கள்.

# பிஞ்சுமுகத்தின் தேடல்

பொங்கிவரும் அலையைக் கண்டு என் மனம் பூரித்தது. தூரத்திலிருந்தே எழும்பிச் சுருண்டு குதிரைபாய்வதுபோல விரைவாக ஓடிவரும் பெரிய அலை படாரென்று கரையில் மோதியது. நான் கொஞ்சம் பின்னுக்கு நகர்ந்தேன். வெண்மையான நுரைகள் என் கால்களைத் தொட்டபோது உடல் முழுவதும் ஒரு புதிய உணர்வு பிறந்தது. கால்கள் சரசரவென மண்ணில் புதைய என் மனமும் கரைய அப்படியே நின்றேன். கடலில் சிறிய படகொன்று அலைகளோடு போராடிக் கொண்டு கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அந்தப் படகில் இருப்பவர்களை என் கண்களால் உற்று நோக்கினேன். வெறும் கரும்புள்ளியாக ஓரிரு தலைகள் தென்பட்டன. தண்ணீரில் கால்கள் நனைய நின்றபடியே வானத்தைப் பார்த்தேன். மூன்று சின்னக் குருவிகள் வேகமாகப் பறந்து கொண்டிருந்தன. அவற்றுக்கும் மேலாக ஒரு விமானம் போய்க்கொண்டிருந்தது. அதைக் கண்டதும் என் நினைவு தடம் புரண்டது.

எட்டு வருடங்களுக்கு முன்னே வானத்தில் இரைச்சலோடு வரும் விமானத்தைக் கண்டால் எங்கள் வீடே கலங்கும். எல்லோரும் அம்மாளே! என்று கும்பிட்ட படி பதுங்கு குழிக்குள் வேகமாக இறங்குவோம். எனக்கு அப்போது மூன்று வயது எங்கள் வீட்டில் நான்தான் செல்லப்பிள்ளை. அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, மாமா, சித்தி என்று எல்லோரும் ஒன்றாய்க்கூடி ஒரு வீட்டில் வாழ்ந்தோம். என்னுடைய அம்மம்மாவும், அம்மப்பாவும் நாலு தலைமுறையினர் ஒன்றாய் வாழ்கின்றோம். என்று பெருமையாகப் பேசுவார்களாம். என்னுடைய அம்மம்மாவின் அப்பாவை நான் 'தாத்தா'என்று கூப்பிடுவேன் அதனால் அவருக்கு தாத்தா என்ற பேரே நிலைத்து விட்டது. மாலைவேளையில் அவருடன் கால்கள் மணலில் புதைய அந்தக் கடற்கரையில் நடந்த பசுமையான மாலை வேளைகள் இன்னும் நினைவில் ஓவியங்களாக நிலைத்து நிற்கின்றன. என் கையில் எப்போதும் ஒரு சின்னப்பை கொண்டு வருவேன். தாத்தாவும் நானுமாக சிப்பி, சோகி என்று பொறுக்கி அதை நிரப்பிக் கொண்டு தான் வீடு திரும்புவோம். பூரணை நாட்களில் பெங்கிவரும் பெரிய அலைகளை எண்ணி எனக்கு ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்களின் எண்ணிக்கையை அவர் சொல்லித் தருவார். அவர்தான் எனக்கு நிறையக் கதைகள் சொல்லித்தருவார். ஒரு நாள் 'காகமும் வடையும்' என்ற கதையை அவர் சொல்லித் தந்தார். பிறகு அந்தக் கதை என்னைச் சொல்லச் சொன்னார். நான் கதையை மாற்றி நரி காகத்தைப் பாடச்சொன்னபோது காகம் வாயைத்திறக்கவில்லை. நரி ஏமாந்து போய் விட்டது.

தாத்தாவுக்கு ஒரே வியப்பு 'எடி! கள்ளப் பெட்டை! எனக்குப் புதுக்கதை சொல்லித் தருகிறாயே! கெட்டிக்காரி! என்று பாராட்டினார். என்தலையைச் செல்லமாகத் தடவி இனிமேல் நீதான் எனக்குக் கதை சொல்ல வேணும்! எனக்கு ஒரே புளுகம் நான் பல்வேறு கதைகளை இட்டுக்கட்டி நயமாகச் சொல்லுவேன் வீட்டில் இரவு சாப்பிட்ட பின்னர் என் கதை அரங்கேறும். தாத்தாவை வென்று விட்ட பேத்தி' என்ற பட்டம் எல்லோரும் எனக்கு ஏகமனதாக வழங்க நானும் அதை ஏற்றுக்கொண்டேன். தாத்தாவின் பல்லில்லாத பொக்கை வாய்ச்சிரிப்பும் அதை ஆமோதித்தது. அந்த நாள் மகிழ்வுடன் கழிந்தது என்று நாம் இருந்தவேளை... திடீரென குண்டுபோடும் விமானத்தின் பேரிரைச்சல் ... எல்லோரும் பதறியடித்துக்கொண்டு ஓடினோம். திடீரென்று மின்சாரம் நின்றுவிட்டது. அப்பா பருந்து - கோழிக் குஞ்சைத் தூக்குவதுபோல என்னைத் தூக்கிக் கொண்டு பதுங்கு குழிக்குள் பாய்ந்தார். நான் தாத்தா!.... என்று கூப்பிட்டேன் என் குரலோடு பெரியதொரு வெடிச்சத்தம் கேட்டது. அவ்வளவு தான் நான் மயங்கி விட்டேன்.

மறுநாள் பொழுது விடிந்தபோது நான் கண்ணை விழித்தேன். நாங்கள் ஒரு புதிய இடத்தில் இருந்தோம். அம்மா! நான் மெல்லக் கூப்பிட்டேன். அம்மாவைக் காணவில்லை. அப்பா! என் குரலை உயர்த்தி அப்பாவைக் கூப்பிட்டேன் யாரும் வரவில்லை. ஒரு வெள்ளைச் சீருடை அணிந்த பெண்.. யாரென்று அப்போது தெரியவில்லை. கிட்ட வந்தா அவவின் கையில் ஏதோ ஒரு கோப்பையில் என் பசி என்னைத் தூண்ட கையை நீட்டி வாங்கினேன் கஞ்சி! மடமடவென்று குடித்தேன் வயிறு கொஞ்சம் குளிர்ந்தது. மெலலச் சற்றும் முற்றும் பார்த்தேன் எனக்குத் தெரிந்த முகங்கள். எதுவுமே அங்கில்லை எனக்கு அழுகை பொங்கிவந்தது.



வாய்விட்டு அம்மா... என்று அழுதேன் மீண்டும் அந்த வெள்ளைச் சீருடை எனக்கருகில் வந்து இருந்தது. என் கையை இதமாகப் பற்றி என் கண்ணீரைத் துடைத்தது பிள்ளை உன்ரை பேரென்னம்மா! நான் உடனே 'அருவி' என்று சொன்னேன். நல்ல தமிழ்பெயர்! வெள்ளைச் சீருடை அக்கா பாராட்டினாள் அப்போது டக்... டக்.... சப்பாத்து ஒலிகேட்டது. ஒரு டாக்டர் வந்தார். என் கையைப் பிடித்துப்பார்த்தார். அக்காவிடம் இந்தப் பிள்ளையை வீட்டிற்கு அனுப்பலாம் என்று அவர் சொன்னது என் காதிலும் கேட்டது. சொல்லிவிட்டு அவர் போக அக்கா என்னிடம் வந்தாள். அருவி நீ எந்த ஊர்? அக்காவின் கேள்விக்கு நான் உடனே பதில் சொன்னேன். நல்லூர் என் குரல் கேட்டு அக்காவின் முகம் மாறியது. கொஞ்ச தூரம் என்று மட்டும் சொன்னாள். நான் பின்னோரம் உன்னைக் கூட்டிக் கொண்டுபோறன் என்று அக்கா சொல்லிச் சென்றாள். நான் அவள் போகும் அழகை என்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

அக்கா சொன்னபடி மாலை வந்து என்னைக் கூட்டிச்சென்றாள். அவளுடைய சிறிய குடிசையில் வேறு யாரும் இல்லை. இரவுச் சாப்பாடு செய்து கொண்டு தன் கதையைச் சொன்னாள். குண்டு வீச்சில் எல்லோரும் போட்டினம். நான் மட்டும் தப்பினன். தாதி வேலை எண்டு ஒரு வேலை செய்கிறேன். எனக்கு ஒருவரும் இல்லை.... நீ என்னோடு இருக்கிறாயா? அக்காவின் கண்கள் குளமாக என் கையை இறுகப்பிடித்துக் கொண்டு அவள் கேட்ட போது... நான் அவளைக் கேட்க இருந்த கேள்விகள் எல்லாம் மறந்து போக... என்வாய் மட்டும் சரியென்று சொல்ல ... அக்கா என்னை இறுகக் கட்டித் தழுவினாள்.

அந்தத் தழுவலில் நான் அம்மாவை, அப்பாவை, அம்மம்மாவை, அம்மப்பாவை, தாத்தாவை ... எல்லோருடைய பரிவையும் அன்றே உணர்ந்தேன். இப்போது எட்டாண்டுகள் ஓடிவிட்டது.

நானும் அக்காவும் எங்கள் துயரங்களை ஆழக்குழி தோண்டிப் புதைத்துவிட்டு புதிதாகப் பிறவி எடுத்தவர்கள்போல வாழ்கின்றோம்.

அக்கா என் கல்வியில் மிகுந்த முயற்சி எடுக்கிறாள். அவள் தனக்கென ஒரு வாழ்க்கையைத் தேடவில்லை. என்னை வளர்ப்பதிலே மகிழ்வாய் இருக்கிறாள். அடிக்கடி "என்னைக் கலி தீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்" என்ற பாரதியின் சின்னஞ்சிறு கிளியே என்ற பாட்டை அவள் பாடுவாள்... அருகில் அவள் குரல் தான் கேட்கிறது. அருவி இங்கேயா இருக்கிறாய்?" அவள் குரல் எனக்கு உற்சாகம் தந்தது. கடலலையை ஒரு முறை பார்த்துவிட்டு, அவளை நோக்கி ஓடினேன். அக்கா வெள்ளைச் சீருடையில் தேவதை போலச் சிரித்துக்கொண்டு நின்றாள்.

மனோன்மணி சண்முகதாஸ்.

# பெண்ணுக்கு



எப்பொழுதும் புதியதொரு கண்டுபிடிப்பு அறிமுகப்படுத்தப்படும் பொழுது, உடனடியாக அதனுடைய நன்மைகள் பற்றியே அதிகளவில் பேசப்படும். சில காலங்களின் பின்னர்தான் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுகிறது. அண்மையில் நான் வாசித்த சில வரிகள் இதனை மெய்ப்பிக்கிறது. அந்த வரிகளில் பொதிந்திருந்த கருத்து என்னை சிந்திக்க வைத்தது. அவற்றைப் பகிர்ந்து கொள்கிறேன்.

'ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் தினமும் நடந்துகொண்டிருக்கிற ஒருவகைத் துயரம் இருக்கிறது. அதனுடைய விளைவு அதிகதூரம் சென்றடைகிறது. இத்தகைய சிறிய துயரங்களில் பெரிய துயரங்கள் வேர்விட்டுள்ளன. ஆனால், எப்படியோ பலர் அவற்றைக் கவனிப்பதாகத் தோன்றவில்லை.' தற்காலத்தில் நாம் வாழ்க்கையில் அதிகம் பெறும் நம்பிக்கையில் எம்முடைய சிந்தனா சக்தியை மின்சார சாதனங்களிடம் கொடுத்து விடுகிறோம். எங்களுடைய வீடுகளில் மின்சார சாதனங்கள் அதிகம் நிறையுமளவிற்கு எம்மைச் சுற்றி சிந்தனையுடைய மக்கள் குறைவாக இருப்பது ஒரு வெளிப்படையான உண்மையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அது பொதுவான உண்மை என்பதை நாம் காணலாம்.'

இவைதான் அந்த வரிகள். மேலோட்டமாகப் பார்த்தால், புதிதாக எந்தக் கருத்தும் இலலாததுபோல் தோன்றும்.

## பெண்ணிடமிருந்து...

அல்லது மின்சார சாதனங்களைப் பயன்படுத்துவதால், நேரம் மிச்சமாகிறது. எவ்வளவு வேலைகளைச் செய்து முடிக்கக் கூடியதாக இருக்கிறது என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், கொஞ்ச நேரம், ஒருநாள் முழுவதுமான உங்கள் செயற்பாடுகளை ஆராய்ந்து பாருங்கள். தெரியும் நாங்கள் மிகத் தெளிவாகக் கூறிய 'நேரத்தை மிச்சம் பிடிக்கலாம்' என்ற வார்த்தையை எவ்வாறு வீணடித்துக் கொண்டிருக்கிறோம் என்பது.

எங்களுடைய வீடுகளிலிருக்கும் சமையலறை, படுக்கையறை, மின்சார சாதனங்களைப் பயன்படுத்தி, அவசர அவசரமாக வேலைகளை விரைவாக முடிக்கிறோம். பின்பு இன்னொரு மின்சார சாதனமான தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் அமர்ந்து கொள் கிறோம். அதன்பின்பு சின்னத்திரை நாடகங்களில் மூழ்கி, நேரம் போவது தெரியாமல் இருக்கிறோம். அத்துடன் முடிக்கிறோமா? நாங்கள் சந்திக்கும் உறவினர்கள், நண்பர்களுடன் அந்த நாடகங்களைப் பற்றி மீண்டும் கதைக்கிறோம்.

இதனால்,

✷ குடும்ப உறுப்பினர்கள், நண்பர்களிடையே பரஸ்பர அன்னியோன்யம், ஆரோக்கியமான உரையாடல்கள் தவிர்க்கப்படுவதையும்,

✷ சிறியவர்கள் பெரியவர்களாகும்போது, அவர்கள் தனித்தீவுகளாகி ஏனையவர்களுடன் பழக, புதிதாகச் சிந்திக்க முடியாமல் போகும் என்பதையும் மறந்து,

மிச்சம் பிடித்த நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த செயற்பாடுகள் எம்மிடையே ஆழமான நல்ல கருத்துக்கள், பிரயோசனமான விடயங்கள் பரிமாறப்படுவது சிறிது சிறிதாக குறைந்து வருவதையும், வாசிப்பின் மீதான அக்கறையின்மையையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

கூடவே இதனை எவ்வாறு எதிர்கொள்வது? என்ற கேள்வியும் எழுகிறது. பெரும்பாலான வீடுகளில் பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள் வாங்குவதே இல்லை. பெண்களுக்கு இதில் ஆர்வம் இல்லாததும், எதற்காக வீண் செலவு என நினைப்பதுமே காரணம். புத்தகங்களுக்குச் செலவிட தயங்குகிறார்கள். வாசிப்பதற்கு நேரம் இல்லை என்று கூறுகிறார்கள்.

புத்தகங்கள் எப்போதும் வைத்திருந்து பயன்படுத்தக் கூடியவைகள். மனநிறைவைத் தருபவை. நல்ல ஆலோசகரும்கூட. அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லக் கூடியவை. மாதம் ஒரு சஞ்சிகை, கிழமையில் ஒரு பத்திரிகை என ஆரம்பியுங்கள். ஏன் நல்ல தரமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் பாருங்கள் அதற்கும் மேலாக எதற்கு முன்னுரிமை கொடுப்பது என்று சிந்தித்து அதன்படி செயற்படுங்கள். இதன்மூலம் சிந்திக்க மறுப்பதன் துயரத்திலிருந்து விடுபடலாம்.

- இளவெயினி

# குழந்தையின் பேச்சுத்திறனில் கவனம் தேவை



குழந்தைகள் பிறந்தவுடன் பேசி விடுகிறார்களா? இல்லை. அம்மா, அப்பா மற்றும் அயலிலுள்ளோர் பேசுவதைக் கற்றுக்கொள்கிறார்கள்.

ஆனால், எடுத்த எடுப்பில் அவர்களுக்கு உச்சரிப்பு சரியாக வராது. எதையோ கூற, எதுவோ வாயிலிருந்து வரும். ஆனாலும் எப்படியும் தாம் நினைத்ததை வெளிப்படுத்த முயற்சிப்பார்கள். அந்த முயற்சியே மிகவும் வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கும்.

தாயின் உச்சி குளிரும். இன்னும் பேசமாட்டார்களா என்று மனம் ஏங்கும். அதுதான் மழலை மொழி.

வீட்டில் சுதந்திரமாக, கட்டுப்பாடற்ற ஒரு அன்பும், அரவணைப்பும் மிக்க சூழலில் வாழ்ந்து பழகிய அவர்கள் பாடசாலையில் சேர்க்கப்படும்போது, முற்றிலும் புதிய சூழலைக் கண்டு வெருண்டு விடுகிறார்கள். புதிய சூழலுக்கு முகங்கொடுக்க தயங்குகின்றார்கள்.

பெற்றோருக்கும் தமது பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்க முடியுமா என்று பின்வாங்குகின்றார்கள்.

இலங்கையில் இப்போதுள்ள கல்வித்திட்டம் பெற்றோரின் இந்த கவலையை முற்றாகவே தீர்த்து வைக்கின்றது.

பாடசாலையில் பாலர் வகுப்பு மாணவர்கள் தமது வீட்டில் இருப்பது போலவே சுதந்திரமான சூழலை உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

சில பாலர் பாடசாலைகளில் மொழியைச் சரியாக உச்சரிக்கத் தெரியாத குழந்தைகளைச் சேர்க்க மறுக்கின்றார்கள்.

இது தவறான செயலாகும். ஏதாவது ஒரு காரணத்தினால் பிள்ளைகளுக்கு மொழி உச்சரிப்புத் திருத்தமாக வரவில்லை என்றால் அந்த பிள்ளைகள்மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, அவர்களை அன்பாலும், ஆதரவாலும் அரவணைக்கும்போது பிள்ளை தானாகவே திறமையாகப் பேசக் கற்றுக்கொள்ளும்.

இதற்கு வகுப்பறை நல்லதொரு சூழலாகும். சக வயது மாணவர்கள் 4 அல்லது 5 குழுக்களாகப் பிரித்துவிட்டு பேசிப்பழகும் சூழலை உருவாக்கிக் கொடுத்தால் பேச்சுத்திறன் விரைவில் அதிகரிக்கும்.

ஆசிரியர்களும் இவ்வாறாக குழந்தைகளின் வளர்ச்சியில் கூடுதலான அக்கறை செலுதத வேண்டும் என்பது முக்கியம். ☆

ஒரு படைப்பாளியின் நினைவாக... பகுதி -1 - தி.ஞானசேகரன்

# மலையக இலக்கிய மறுமலர்ச்சியில் பங்காற்றிய எழுத்தாளர் கே.கணேஷ்



கே.கணேஷ்

**முதுபெரும் எழுத்தாளரும் சிறந்த பத்திரிகையாளருமான கே.கணேஷ் அண்மையில் காலமானார் அவரின் நினைவாக இந்தக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

இலங்கையில் மலையகப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை தொடங்கி ஏறத்தாழ நூறு வருடங்களின் பின்னரே மலையக ஆக்க இலக்கிய முயற்சிகள் ஆரம்பமாகின. 1920 இன் பின்னர், தேசபக்தன் கோ.நடேசையர், அப்துல் காதிறுப் புலவர் ஆகியோர் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டனர். இவர்களே மலையக எழுத்துலகின் முதற்பரம்பரையினர்.

இவர்களையடுத்து 1930களில் எழுதத் தொடங்கிய சி.வி.வேலுப்பிள்ளை, கே.கணேஷ் ஆகிய இருவரும் முக்கியமானவர்கள். இவர்கள் இரண்டாம் தலைமுறையினர். இவர்களது எழுத்துப்பணியுடன் மலையக இலக்கியம் மறுமலர்ச்சியும் உத்வேகமும் பெறத்தொடங்கிறது.

கே.கணேஷ் அவர்கள் கண்டியை அடுத்துள்ள அம்பிட்டிய என்னும் இடத்தில் உள்ள 'தலைப்பின்னாவ' என்னும் தோட்டத்தில் திரு. கருப்பண்ணபிள்ளை அவர்களுக்கும் வேளுரம்மாளுக்கும் ஏகபுத்திரனாக 02-03-1920 இல் பிறந்தார். இவரது பெற்றோரும் மூதாதையரும் தமிழகத்தின் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தத்தமங்கலம் என்ற சிற்றூரில் இருந்து இலங்கைக்கு வந்து தலாத்து ஓயவில் குடியேறியவர்கள். கணேஷ் அவர்களுக்குத் தாய் தந்தையர் இட்டபெயர் சித்திவிநாயகம். ஆனாலும் வீட்டுப் பெயராகிய 'கணேசன்' என்பதே எழுத்துலகில் கணேஷ் ஆகி நிலைகொண்டுவிட்டது.

கணேஷ் தனது ஆரம்பக்கல்வியை தோட்டத்து எல்லையிலிருந்த பெண்கள் பாடசாலை ஒன்றில் சிங்கள மொழியிலே கற்றார். அதே வேளை அவரது தாயார் தமிழ் மொழியை வீட்டிலே சிறந்த முறையில் கற்பித்தார். தேவார திருவாசகங்கள், நீதி நூல்கள் ஆகியவற்றைக் கற்பித்ததோடு தமிழகத்திலிருந்தும் அஞ்சல் வழியாக பல நூல்களைப் பெற்றுப் படிக்கக்கொடுத்தார். இதன் காரணமாக சிறு வயதிலேயே கணேஷ் அவர்களுக்குத் தமிழ் மீது ஒரு தனிப்பற்று ஏற்பட்டது.

கணேஷ் தனது இடைநிலைக் கல்வியை கண்டியிலுள்ள புனித அந்தோணியார் கல்லூரியில் ஆங்கில மொழியில் பெற்றார். பள்ளியில் தமிழ் வகுப்புகளே இருக்கவில்லை. தாய்மொழியில் பேசினா லும் தண்டனை என்ற நிலைமை இருந்தது. அந்தக் காலத்தில், முப்பதுகளில் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தாக்கம் இலங்கையிலும் பரவியிருந்தது. இந்திய விடுதலை வீரர் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பெயரில் கண்டியில் அமைந்திருந்த போஸ் சங்கத்தின் தொடர்பு கணேஷுக்கு ஏற்பட்டது. அங்குள்ள வாசிகசாலையில், இந்தியாவில் இருந்துவந்த தமிழ்ச் சஞ்சிகைகளும், இந்திய விடுதலை இயக்கம் குறித்த சஞ்சிகைகளும் இவருக்கு வாசிக்கக் கிடைத்தன. இவற்றைத் தொடர்ச்சியாக வாசித்ததினால் அந்நிய ஆட்சியில் ஒரு வெறுப்பு கணேஷுக்கு ஏற்பட்டதோடு இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றி ஆர்வமும், நாட்டு விடுதலை இயக்க உணர்வும் ஏறபடடன. ஆங்கில மொழிமீது பற்றுக்குறைந்து தமிழ்மொழிமீது பற்று அதிகமாகியது. போஸ் சங்கத்தில் தமிழ் ஆர்வலர்களின் நட்பும் இளைஞனான கணேஷுவுக்குக் கிடைத்தது.

போஸ் சங்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தவரும் மகாத்மா காந்திக் கல்லூரியிலும் (தற்போதைய **Hindu senior school**) தனியார் ஒருவர் நடத்திய மத்திய கல்லூரியிலும் ஆசானாக இருந்தவருமாகிய திரு முத்துராமலிங்கம் என்பவர், கணேஷ் அவர்களின் தமிழ் ஆர்வத்தைக் கண்ணுற்று, அவரைத் தமிழகம் சென்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து கல்வி கற்கும்படி ஆலோசனை கூறினார். அத்தோடு அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத் தார். 1934 ஆம் ஆண்டு தமிழகத்துக்குக் கல்வி கற்கச் சென்ற கணேஷ், தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து கல்வி கற்ற வேளையில், அவருக்கு இந்திய சுதந்திரப்போராட்ட வீரர்களின் தொடர்பும் நட்பும் ஏற்பட்டன. தற்போது, இந்திய அரசின் தியாகச்சின்னம் - தாமிரவிருது பெற்றவரும், திருநெல்வேலி சதிவழக்கொன்றில் ஆயுள் தண்டனை பெற்று சிறைவாசமிருந்து விடுதலையாகியவருமாகிய இ.மாயாண்டி பாரதியின் நட்புக் கிடைத்தது. அவரோடு அவரது இல்லத்தில் தங்கியிருந்து தமிழ்ச்சங்கக் கல்லூரியில் பாடம் ஏற்று வந்தார். அந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் மறுமலர்ச்சிக் கருத்துக்களைக் கொண்ட இடதுசாரிக் கொள்கைகளும், காந்தியக் கொள்கைகளும் வலுப்பெற்றிருந்தன. தமிழ் நாட்டில் திரு.வி.க., ம.சிங்காரவேலு செட்டியார், பெரியார் ஈவேரா, ப.ஜீவானந்தம், கே.முருகேசன் ஆகியோர் இயக்கங்கள் அமைத்துப் போராடிய காலமது. உலகில் உள்ள துன்ப துயரங்கள் யாவும் தீர்வதற்கு 'கம்யூனிஸம்' ஒன்றே ஒரேவழி என இவர்கள் எடுத்துரைத்தனர்.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் எழுதிய 'அபேத வாதம் ஏன்? ஜவஹர்லால் நேரு எழுதிய 'இந்தியா எங்கு செல்கிறது? அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட சுபாஷ் சந்திரபோஸ் எழுதிய 'சாம்ய வாதம்' ஆகிய நூல்களை வாசித்ததனால் கணேஷ் அவர்களுக்கு இடதுசாரிக் கொள்கைகளில் ஈடுபாடு அதிகரித்தது.

இதன்காரணமாக ஆக்ராவில் இருந்த அபேத வாதக் கட்சியின் ராமண்ண சாஸ்திரியுடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. இதனையறிந்த இந்திய இரகசியப் பொலிசார் இவரைப் பற்றி விசாரிக்கத் தமிழ்ச்சங்கக் கல்லூரித் தலைமை ஆசிரியரை நாடினர். இதன் விளைவாக இவர் தமிழ்ச்சங்கக் கல்லூரியில் இருந்து விலக நேரிட்டது. அதன்பின்னர் கணேஷ் திருவையாறு அரச கல்லூரியில் சேர்ந்து தனது கல்வியைத் தொடர்ந்தார்.

தமிழகத்துக்குத் தமிழ் கற்க்ச் சென்ற கே.கணேஷ் அங்கு கம்யூனிஸ சித்தாந்த அறிவையும் இந்திய சுதந்திரவீரர்களின் தொடர்பையும் தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் நட்பையும் பெற்று 1938 இல் இலங்கை திரும்பினார். இலங்கை திரும்பிய பின்னரும் தமிழக எழுத்தாளர்களுடனும் சுதந்திரப் போராட்ட இயக்கங்களுடனும் தமது தொடர்பினைப் பேணிவந்தார்.

(தொடரும்)

நன்றி ஞானம்.

மிதிவெடி அபாயம்... கு. கலைவாணி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

# மிதிவெடி அபாயப் பகுதிகளில் விழிப்புடன் செயற்பட வேண்டும்

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இரு இனங்களிடையே பாரிய மோதல் இடம் பெற்று வருகின்றது. இதனால், ஆயுதபாவனை அதிகரித்துள்ளது. கனரக ஆயுதம் முதல், மறைந்திருந்து உயிர்கொல்லும் மிதிவெடிகள் வரை காணப்படுகின்றது. யுத்தமானது ஓய்ந்த பின்னும், மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கும் ஒரு கொலையாளியாக, இந்த மிதிவெடிகள் காணப்படுகின்றன. இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கு பகுதியிலேயே இதனது தாக்கம் வலுவாகக் காணப்படுகின்றது. இந்த வெடிபொருட்கள் அதாவது, மிதிவெடிகள், யுத்தம் நடைபெற்ற இடங்களிலேயே காணப்படுகின்றன. இந்த மிதிவெடிகளால் யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் மீளக்குடியமர்வோர், மற்றும், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக நிலங்களை பயன்படுத்துவோர் சிறுவர்கள் போன்றோர் பாதிக்கப்படுகின்றனர். இந்த மிதி



வெடிகள் இராணுவ வேலிகள், காவலரண்கள் மற்றும், பயன்தரு மரங்கள் போன்ற பகுதிகளிலும், கிணறுகள் வீட்டு வாசல் படிக்கட்டு, அண்மித்த பிரதேசங்களிலும் காணப்படுகின்றன.

மிதிவெடிகள் என்னும் போது இலங்கையில் பாவிக்கப்படும் வகையாக, சீன தயாரிப்பான சைனீஸ் 72, இத்தாலிய தயாரிப்பான இத்தாலியன் 50 மற்றும் பாகிஸ்தான் தயாரிப்பான பாகிஸ்தான் $P_4$ போன்றன இலங்கை அரசுப்படைகளாலும்,ஜொனி என்னும் மிதிவெடி வகைகள் புலிகளாலும் பாவிக்கப்படுகின்றது. இதைவிட வெடிக்காத அதாவது, ஏவப்பட்டு வெடிக்காதவையாக அருள் ஏவுகணை மோட்டார் எறிகணை, ஆர்.பி.ஜி எறிகணை மற்றும், கைக்குண்டு என்பவை அடங்கும் மேற்படி பொருட்களை கையாளும்போதே அனர்த்தங்கள் ஏற்படுகின்றது.

யுத்தம் நீங்கிய பின்னும் இந்த மிதிவெடிகளால் கணிசமான அளவு உயிர்ச்சேதங்களும், இழப்புக்களும் ஏற்படுகின்றது. இதனை நாம் தடுக்கவேண்டுமானால், ஒட்டு மொத்தமாக விழிப்புணர்வு அடையவேண்டும். இந்த மிதிவெடிகளின் பாவனையை தடை செய்வதற்கும், உற்பத்தியை தடுப்பதற்குமான உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட ஆதரவின் பிரகாரம் 1997 டிசம்பரில் ஒட்டோவா நகரில் 122 நாடுகளின் அங்கீகாரத்துடன் ஒட்டோவா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

ஆனால் இந்த உடன்படிக்கையால் மட்டும் மேற்படி பொருட்களின் பாவனையை கட்டுப்படுத்தமுடியாது. இந்தமிதிவெடிகளால் காலத்துக்கு காலம் சாதாரண மக்கள் மட்டுமல்லாது, இராணுவ வீரர்களும் பாதிக்கப்படுகின்றார்கள். இந்தப் பொருட்களின் பாவனையை தடுப்பதற்கு அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. 2001 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 7 ஆயிரம் மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த மிதிவெடிகள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றது. ஒன்று தனிநபர் எதிர் கண்ணி, இரண்டு வாகன எதிர் கண்ணி. 1999 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இலங்கை அரசு தகவல் தருகையில் 4 ஆயிரம் இராணுவ வீரர்கள் மிதிவெடிகளால் காயமடைந்ததாக கூறியுள்ளது. ஆனால், புலிகள் தரப்பில் எந்தவித தகவலும் வெளியிடப்படவில்லை. புலிகள் கட்டுப்பாட்டில் இயங்கும் வெண்புறா நிறுவனமானது, 179 பேர் பாதிக்கப்பட்டதாக கூறியிருக்கின்றது. இதனைவிட இலங்கையின் கொழும்பில் தனது தலைமையகத்தைக்கொண்டு இயங்கிவரும் ஜெயப்பூர் நிறுவனம் அதாவது, செயற்கைக்கால் நிறுவனம், குண்டகசாலையில் 72 குடும்பங்களுக்கும் மற்றும் யுத்தத்துடன் தொடர்புடைய 343 பேருக்கும் உதவிவழங்கியுள்ளது. (செயற்கை

**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்திய மிதிவெடி இடர் அபாயக் கல்வி கட்டுரைப்போட்டியில் முதலாம் பரிசுபெற்ற கட்டுரை.**

கால்களில்) இதனைவிட 2001 ஆம் ஆண்டில் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள வெண்புறா நிறுவனமானது, தகவல் தருகையில் 400 பேர் தம்மிடம் செயற்கை கால்களுக்கு காத்திருப்பதாகக் கூறியிருந்தது.

மேலும், 1998 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மட்டும் இந்தப் பொருட்களால் 45 பேர் பாதிக்கப்பட்டும் 1999 இல் 34பேர் பாதிக்கப்பட்டும் உள்ளனர். அத்துடன் மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் **SSD** நிறுவனத்தின் தகவல்படி 43பேர் இந்தப்பொருட்களால் இறந்தும் 40 படுகாயமடைந்தும், மற்றும் பலர் அவயவங்களை இழந்தும் உள்ளதாக **SSD** இணைப்பாளர் திரு பாலா வவுனியாவில் இந்த அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பொருட்களால் ஏற்படும் பாதிப்பினை நாம், உடனடியாகத் தடைசெய்யவேண்டும். இதற்காக நாம் ஒட்டுமொத்தமாக விழிப்புணர்வு பெற வேண்டும். நாம் போர் நடைபெற்ற பகுதிக்குச் செல்ல வேண்டுமாயின், எமது பிரதேச பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக நாம் அண்மையிலுள்ள ஹலோ ரெஸ்ட், புனர்வாழ்வுக்கழகங்கள் மற்றும் வெண்புறா நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளலாம். அத்துடன் அபாயம் என சிவப்பு முக்கோணம் இடப்பட்ட பகுதிகளை தவிர்ப்பதன் ஊடாகவும், **DENGER MINES** என்கின்ற அறிவுப்புள்ள பகுதிகளுக்கு பிரவேசிப்பதை தவிர்ப்பதன் ஊடாகவும், சிறார்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாகவும் ஓரளவு தடுக்க முடியும்.



அண்மையில் **FSD** கண்ணிவெடியகற் றும் நிறுவனமானது மன்னார் வவுனியா இரு மாவட்டங்களில் 3346 கண்ணிவெடிகளையும், 8 வாகன கண்ணிவெடிகளையும், 2016 வெடிக்காத வெடிபொருட்களையும், 5616 சிறிய வகை பொருட்களையும் 97268 தூர சென்ரி மீற்றரில் மீட்டுள்ளது. அதைவிட இரு மாவட்டங்களிலும் 312 கிராமங்கள் கண்ணிவெடி அபாயப் பகுதிகளாகவும், இனங்காணப்பட்டுள்ளதுடன், 179 கிராமங்கள் அதிகூடிய கண்ணிவெடி பிரதேசமாக இனங்காட்டப்பட்டுள்ளதாகவும், 15.02.2004 பத்திரிகை தெரிவித்தது.

இவ்வாறு மிதிவெடி அபாய பகுதிகளில் நாம் எமது செயற்பாட்டை விழிப்புடன் செய்ய வேண்டும். இந்தக் கண்ணிவெடிகள் பற்றிய விழிப்புணர்வை யு.என்.எச்.சி.ஆர் உடன் இணைந்து வெண்புறா நிறுவனம் மேற்கொள்கின்றது. கருத்தரங்குகள், போஸ்ரல்கள் மற்றும் வீதி நாடகங்கள் ஊடாக மக்களுக்கு தகவல்களை அனுப்புகிறது. சிறார்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்திட்டத்தை **SEF** என்கின்ற நிறுவனம் மேற்கொள்கின்றது. அண்மையில் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பினால், **ACTIVE THEATRE NIOVENENT** என்கின்ற செயற்திட்டம் இளைஞர் குழுவால் யாழ். கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. 16.02.2004 ஈழநாடு பத்திரிகை பிரசுரித்திருந்தது.

எனவே இந்த மிதிவெடி அபாயக்கல்வி இன்றியமையாததாக காணப்படுகின்றது. இதற்கு பல அரச சார்பற்ற நிறுவனங்கள் துணைபுரிகின்றன. இந்த மிதிவெடி அகற்றும் செயற்பாட்டை யு.என்.எச.சி.ஆர். **ACTION TROIUCT** நடவடிக்கை ஜுலை மாதம் ஆரம்பமாகி 2000 ஆம் ஆண்டு விரிவாக்கப்பட்டது. எனவே இன்றைய சூழலில் உயிர் இழப்பிற்கே உலை வைக்கும் இந்த மிதிவெடிகளால் ஏற்படும்



பாதிப்புக்களை கருத்திற்கொண்டு அனைவரும் விழிப்புடன் செயற்பட்டால், எதிர்காலத்தில் சுபீட்சமான வாழ்வு வாழலாம் இதற்கு இப பொருட்களகற்றும் செயற்பாட்டுக்கு எம்மாலான ஒத்துழைப்பு வழங்கி நாமும் நலமுடன் வாழ ஆவண செய்வோமாக.'

வெடிபொருட்கள் அற்ற பகுதியே பாதுகாப்பு . □□

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
*கொள்ளாத கொள்ளாது உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஆளுனரின் அழைப்பும் கூட்டமைப்பின் நிராகரிப்பும்

1987 ஆம் ஆண்டு இந்திய, இலங்கை உடன்பாட்டின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் விருப்ப அங்கீகாரமின்றி ஒரு திணிப்பு முயற்சியாகவே மேற்கொள்ளப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணசபை ஆட்சி முறையானது 1990 ஆம் ஆண்டில் இந்தியப்படையின் வெளியேற்றத்துடன் அஸ்தமித்த பின்னர், அது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஒரு அமைப்பாகச் செயற்பட்டு வந்தபோதும், ஏனைய மாகாண சபைகள் இயங்குவதுபோன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் இயக்கப்படும் ஒன்றாக இன்று வரை இருந்ததே கிடையாது.

ஏனைய மாகாண சபைகளுக்கெல்லாம் பலதடவைகள் தேர்தல் நடந்துள்ள போதிலும், வடக்கு - கிழக்கு மாகாணசபைக்குரிய தேர்தல் 1988 ஆம் ஆண்டின் பின்னர் ஒரு போதும் நடைபெற்றது கிடையாது. பாதுகாப்பின்மையைக் காரணம் காட்டி அரசு தேர்தலை நடத்தியது கிடையாது. ஆளுனரின் மேற்பார்வை நிர்வாகத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணசபை கடந்த பதினான்கு வருடங்களாக ஏதோ ஒரு வகையில் இயங்கிவருகின்ற போதும், தமிழ் மக்களுக்கு அந்தச் சபைகுறித்த ஆர்வமோ, அக்கறையோ பெருமளவில் இருந்ததுமில்லை. அதன் செயற்பாடுகளால் தமிழ் மக்களோ, தமிழர் வாழ்நிலங்களோ எந்தவகையிலும் பெருமிதப்படக் கூடிய, நினைவில் நிறுத்தி வைக்கக்கூடிய, அபிவிருத்தியையோ, முன்னேற்றத்தையோ கண்டதுமில்லை.

மாகாண சபை என்ற ஒன்று வடக்கு - கிழக்கு மகாணத்தில் தமக்காக இயங்கி வருகின்றதென்பதை தமிழ் மக்கள் மறந்து வெகுகாலமான நிலையில் திடீரென வடக்கு- கிழக்கு மாகாண சபை தற்போது மேற்கொண்டுள்ள செயற்திட்டங்கள் குறித்து விளக்கமளிக்க இந்த மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இச்சபையின் தற்போதைய ஆளுனரும், முன்னாள், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியுமான மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா அழைப்பு விடுத்துள்ளமை ஆச்சரியத்திலும் ஆச்சரியம் தரும் விடயமாகும்.

அதுவும் வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு - புனரமைப்பு தொடர்பாகவும், அதனை முழுமையாகவும், சரியாகவும் மேற்கொள்ளும் வகையிலும் இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபை ஒன்றை நிறுவவேண்டியதன் அவசியம் குறித்த தமிழீழ விடுதலைப்புலிகளின் நியாயமான யோசனைகள் குறித்து, அரசாங்கம் ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கும் வேளையில், மாகாண சபையின் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் குறித்து ஆளுனர் விளக்கமளிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்திருப்பது சந்தேகத்திற்கிடமாக இருக்கிறது.

இதுவரை காலமும், அதுவும் சமாதான முயற்சிகள் ஆரம்பமாகி இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாகிய நிலையில், இப்படியாக ஒருதடவையேனும் ஆளுனர் வடக்கு - கிழக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இப்பிரதேசங்களின் அபிவிருத்தி குறித்துப் பேசியது கிடையாது.

இப்போது மட்டும் ஏன் இந்த திடீர்க்கரிசனை?

வடக்கு - கிழக்கு மாகாணசபை, வடக்கு - கிழக்கு மக்களுக்கும், அவர்களின் வாழ்விடப் பிரதேசத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கும் கடுமையாக அக்கறையுடன் செயற்படுகிறது எனக்காட்டி, இடைக்கால நிர்வாக அதிகார சபை ஒன்று தேவையில்லை என்று சர்வதேசத்திற்கு காட்ட விரும்பும் அரசின் எண்ணத்துக்கு வலுவூட்ட ஆளுனர் முனைகிறாரா?

நிச்சயமாக இந்த ஆளுனரின் அழைப்பிற்கு ஒரு அரசியற் பின்னணி இருக்கவே செய்கிறது என்பதில் சந்தேகமில்லை.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக அரசுமேற்கொண்ட ஒரு மாபெரும் திட்டமிட்ட இனஅழிப்பு யுத்தத்தின் போது இப்பிரதேசங்களை நிர்மூலம் செய்த படையினருக்கு தலைமை தாங்கிய படைத்தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா, இந்த மாகாண சபைக்கான ஆளுனராக நியமனம் செய்யப்பட்டதே அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான அரசின் நலன்களைக் கருத்தில் கொண்டுதான் என்பதுடன், வடக்கு - கிழக்கு மாகாண சபையில் ஒரு இராணுவ ரீதியிலான நிர்வாகத்தை ஸ்திரப்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனுமேயாகும்.

மிகவும் தொலைநோக்குச் சிந்தனையுடன் தான் அரசு முன்னர் இந்த நியமனத்தை மேற்கொண்டது என்பதை அவரின் தற்போதைய நகர்வுகள் நிரூபிப்பதாகவுள்ளது.

அண்மையில் வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான செயற்திட்டங்களை முன்னெடுக்கும் அதிகார வலுவானது மாகாண சபைக்குக் கிடையாது. சுயாதீனமாக திட்டமிடவோ, செயற்படுத்தல்களை மேற்கொள்ளவோ, மாகாண சபைகளின் ஆளுனர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகாரங்களும் இல்லை.

மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படும் ஏனைய பல மாகாணசபைகளின் செயற்பாடுகளே மத்திய அரசின் ஆதிக்க அதிகார எல்லைகளுக்குள் செயற்பட முடியாது முடங்கிக் கிடக்கின்றன.

பேருக்கு மட்டும் சபைகளாக இயங்கும் இந்தச் சபைகள் இனப்பிரச்சினைதொடர்பாக ஒரு தந்திரோபாய ஏமாற்று அரசியல் காய் நகர்த்தலுக்காக இந்திய இலங்கை உடன்பாட்டின்கீழ் உருவாக்கப்பட்டவைகளேயாகும்.

எனவே இதன் ஆளுனர் என்பவர் மத்திய ஆளும் வர்க்கத்தின் கட்டளையை அதிகார பலமற்ற நிலையில் நின்று, செயற்படுத்தும் ஒருவர் என்ற கருத்து பரவலாகவே எல்லோரிடமும் உள்ளது.

இந்த நிலையில் வடக்கு - கிழக்கு ஆளுனரின் அறிவிப்பும், அழைப்பும்அர்த்தமுள்ள செயற்பாடுகளை நோக்கமாகக் கொண்டதாக இருக்கமுடியாது. நோக்கம் சந்தேகத்திற்கு உரிய ஒன்றாக இருப்பதால் ஆளுனரின் அழைப்பினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பகிஷ்கரிக்க முடிவெடுத்திருப்பது சரியானதேயாகும்.

# நாடும் நடப்பும்




# நாடாளுமன்ற சம்பவங்கள் குறித்து மக்களுக்கு விளக்கம் கொடுக்கவும்!

### விமல் வீரவன்ச கோரிக்கை

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்த சரியான விளக்கத்தை பொதுமக்களுக்கு வழங்குமாறு - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நடவடிக்கைக்குழு உறுப்பினரும், ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் கீழ்த்தரமான நடவடிக்கைகளை சகல தனியார் ஊடகங்களும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தமை அரசாங்கத்துக்கு பெரும் அழுத்தத்தினை கொடுத்துள்ள நிலையில், இத்தகைய கோரிக்கையை விமல் வீரவன்ச விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கான 100 பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முனனணி அரசின் நடவடிக்கைக் குழு முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வீதிவிளக்குகள் பொருத்துவதற்கான விபரங்கள் கோரப்படுகின்றன!

வீதிவிளக்குகள் பொருத்துவதற்கான விபரங்களை வழங்குமாறு யாழ்.செயலகத்தினூடாக யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகள், உள்ளூராட்சி சபைகள், மாநகரசபைகள் முதலானவற்றுக்கு வேண்டுகோள்கள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகொட்டின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் சுமார் 5 மில்லியன் ரூபாவரையில் வீதிவிளக்குகளைப் புனரமைப்பது தொடர்பான பணிகளுக்கு செலவிடப்பட இருக்கின்றது.

இந்தத் திட்டத்திற்கு அமைவாகவே யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேசசபைகள், மாநகரசபைகள், உள்ளூராட்சி சபைகள் முதலானவற்றின் கீழ் உள்ள வீதிகள், ஒழுங்கைகள் முதலானவற்றின் உள்ள வீதி விளக்குகளைப் புனரமைத்தல், புதிதாக வீதிவிளக்குகளை நிறுவுதல் தொடர்பான செலவு விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விபரங்கள் தொடர்பான முழு விபரங்களும் யாழ்.செயலகத்திற்குக் கிடைத்ததும் பிரிவுகளுக்கான நிதிப்பங்கீடு மேற்கொள்ளப்பட்டு வீதி விளக்குகள் பொருத்தும்பணி மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிவிளக்குகள் இன்மையால் அண்மைய நாட்களில் இரவு நேரங்களில் அதிக வீதிவிபத்துக்களும், திருட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ப)

# சந்தேகத்தின் பேரில் கைதான வைத்தியருக்கு பிணை அனுமதி

யாழ்.போதனா வைத்தியசாலை கழிப்பறையில் சிசு ஒன்றை பிரசவித்த சிறுமிக்கு கருக்கலைப்புச் செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மருத்துவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறிப்பிட்ட வைத்தியர் நேற்றுமுன்தினம் யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது சந்தேக நபரை 25 ஆயிரம் ரூபாவுக்கான இரு சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதி வழங்கினார்.

# ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப்பரீட்சை அடுத்தமாதம் நடைபெறவுள்ளது

வடக்கு - கிழக்கில் 1000 ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப்பரீட்சை ஜூலை மாதம் மூன்றாம் கிழமை நடைபெறும் என பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதியில் இருந்து 1000 ஆசிரியர்களுக்கான நியமனத்திற்கு 30 ஆயிரம் விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் யாழ்.மாவட்டத்திலிருந்து 6 ஆயிரம் விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கான பரீட்சை நிலையங்கள் கொழும்பில் அமைக்கப்படுவதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருந்தமைக்கு எதிராக தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள நகரப்பகுதிகளில் பரீட்சை நிலையங்களை அமைக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள குறிப்பிட்ட நகரப்பகுதிகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தப் பரீட்சை நிலையங்கள் அமைப்பதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் மூன்றாம் கிழமையளவில் இந்தப் போட்டிப் பரீட்சை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தீ)

# வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது!

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியின் வலயமட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை மட்டங்களில் இடம்பெற்ற போட்டிகளில் தெரிவான போட்டியாளர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர்.

இந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் யாழ்.மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களிலும் இடம்பெற்றுவருகின்றன. கவிதை, கட்டுரை, பேச்சு, எழுத்தாக்கம், இயல் இசை நடன போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (17)

# வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டியை பகிஷ்கரிக்கத் தீர்மானம்

ஏற்கனவே திட்டமிட்டபடி வடக்கு - கிழக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியை கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடத்தாதுவிட்டால், விளையாட்டுப் போட்டியைப் பகிஷ்கரிக்கப்போவதாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது -

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் வடக்கு - கிழக்கு மாகாண மட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு கபடிப் போட்டியை யாழ்ப்பாணத்திலும், பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியை கிளிநொச்சியிலும் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் திடீரென இந்தப்போட்டிகள் திருகோணமலையில் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

புலம்பெயர் தமிழர்கள்

சந்திரலேகா அவுஸ்ரேலியா

# தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்

**நாம் எமது மொழியை இழப்பதால் எவ்வெவற்றை இழக்கப் போகிறோம் என்பதை சற்றுநினைத்துப் பார்ப்பது பயனுள்ளது. என்று நினைக்கின்றேன். ஆங்கிலத்தில் இது பற்றிப் பல கட்டுரைகள் வந்துள்ளன. அவற்றை எழுதியவர்கள் தமிழர் அல்லர். ஆங்கிலேயர்கள். உநகள் தாய் மொழியை இழந்துவிடாதீர்கள் அதனால் நீங்கள் நாடளடைவில் உங்கள் பண்பாட்டையே இழந்து விடுவீரர்கள் பின்னர் நீங்கள் யார் என்பதையே அறியாத நிலையில் இருண்ட வாழ்வு வாழநேரிடும், எனறு அவர்கள் இக் கட்டுரைகளில் எச்சரித துள்ளனர். இவை தம் நாடுகளில் வாழவந்த பல்வேறு இனத்தவர்களை மனதில் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகள்.**

இந்தியா பிரித்தானிய ஆட்சியை எதிர்த்துப் போராடிய காலத்தில் தமிழ்நாட்டுக் கவிஞர்கள் தமிழ் மொழியின் பெருமையைத் திரும்பத் திரும்பப் பாடி மகிழ்ந்துள்ளார்கள். அவர்கள் தமது தாய் மொழியின் பெருமையை எடுத்துக் கூறியது மட்டுமன்றி தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர். என்று பாரதிதாசன் குறிப்பிட்டது போல தமிழ் மொழியைத் தமிழினத்தின் உரிமைப் போராட்டத்துக்கு அடிப்படையாகப் பயன்படுத்தினர். தமிழின் பெருமையைக் கவிஞர்கள் கவிதை என்ற வடிவத்தின் இயல்புக்கு ஏற்ப சிறிது மிகைப் படுத்திக் கூறியிருந்த போதும் திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழமை வாய்ந்ததும், இலக்கியச் செழிப்பு அதிகம் கொண்டதுமான தமிழ் மொழி அம்மொழியைப் பேசுபவர்களாகிய நாம் பெருமை கொள்ளுமளவிற்குப் பல வகைகளில் சிறப்பும் பெருமையும் கொண்டது.

ஏறக்குறைய இருபத்தொரு நூற்றாண்டு கால நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ் மொழியில் சொல்லப்படாத விஷயங்களே இல்லை என்னுமளவிற்கு காதல், வீரம், அறம். பக்தி, தத்துவம், நாட்டுப்புறப் பாடல்கள், தாலாட்டு, சுதந்திரம் என்று பலதரப்பட்ட விடயங்களிலும் ஏராளமான இலக்கியங்கள் எழுந்துள்ளன. பக்திக்குத் தமிழ் என்று சிறப்பித்துக் கூறக்கூடிய வகையில் நெஞ்சை உருக்கும் பக்திப் பாடல்கள் காலம் காலமாகத் தமிழில் தோன்றியிருக்கின்றன. இவற்றுள் தமது இலக்கியச் சிறப்பாலும், சொல்லப்பட்ட விடயத்தாலும் தனித்துவத்துடன் விளங்கிய நூல்கள் ஆங்கிலம் முதலிய பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழின் ஈடில்லாச் சிறப்பால் கவரப்பட்ட பல மேல்நாட்டு அறிஞர்கள் அதனைப் படித்து இன்புற்று வருகின்றனர். வட அமெரிக்காவில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் தமிழ் ஒரு பாடமாகப் போதிக்கப்படுவதுடன் அது பற்றிய விரிவான ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு பல சிறப்புக்களைக் கொண்ட தமிழ்மொழி இன்று தமிழர்களாலேயே பேசப்படாத ஒரு துயரமிகு நிலையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைப் பிற நாடுகளில் வாழும் பல தமிழர் மிகுந்த விசனத்துடன் அவதானித்து வருகின்றனர். அந்த நிலையை மாற்றுவதற்காகத் தாம் வாழும் நாடுகளில் தமிழ்ச் சங்கங்களையும் தமிழ்ப் பாடசாலைகளையும் அமைத்து தம்மால் முடிந்த அளவிற்கு அடுத்த தலைமுறைக்குத் தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் வழங்குவதற்கு முயற்சி செய்து வருகின்றனர். இது எந்தளவில் வெற்றிபெறும் என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

பிறநாடுகளில், உதாரணமாக அவுஸ்திரேலியாவில் பிறந்து வளருகின்ற தமிழ் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் பேசுவது கஷ்டமான காரியமில்லை. ஆங்கிலேயப் பிள்ளைகளோடு பாடசாலைகளில் அதிக நேரம் பழகுவதால் தாங்கள் வேற்று இனத்தவர் என்பதை அவர்களில் பலர் மறந்து அவர்களைப் போலவே தம்மையும் எண்ணி நடந்துகொள்கிறார்கள். அதனால் தமிழை வீட்டில் பேசுவது அவர்களுக்கு விருப்பமான விடயமாக இல்லை. எனவே, பெற்றோர் தமிழில் கேட்கும் கேள்விகளுக்கு ஆங்கிலத்திலேயே பதில் அளிக்கிறார்கள். நாளடைவில் அவர்களது நா ஆங்கில மொழி பேசுவதற்கு முற்றாகப் பழகிவிடவே பின்னர் வயது வந்த போதும் தமிழைப் பேசவிரும்பினும் தமிழரைப் போல உச்சரிக்க முடியாது போவதுடன் புதிய ஒரு மொழியை ஆரம்பத்தில் இருந்து படிப்பது போல அதனைப் படிக்க நேரிடுகிறது. எநத மொழியையாயினும அதிகம் பயன்படுத்தாதுவிடின் அதை விரைவில் மறந்து போக வாய்ப்புள்ளது. எனவே முதல் மொழியாகிய தாய் மொழியிலேயே ஆரம்பத்திலிருந்து பேசிவராது விடின் பின்னர் மிகவும் மனம் வருந்த நேரிடும்.

அண்மையில் சிட்னியில் தமிழ் இளைய சமுதாயத்தால் நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்குப்போக நேர்ந்தபோது, ஒன்றை மனவருத்தத்துடன் அவதானிக்க முடிந்தது. அங்கு உணவு வேளையின் போது எவரும் தமிழில் உரையாடவில்லை. அது குறித்து நான எனது நண்பரின் 16 வயது மகளுடன் கதைத்த போது அவர் கூறிய விடயம் எனக்கு வியப்பளித்தது. யாராவது தமிழில் கதைத்தால் மற்றவர்கள் அவர் இப்போது தான் கப்பலால் இறங்கியவர் என்று கேலி செய்வார்களாம். அதனால் யாரும் தமிழில் பேசவிரும்புவதில்லையாம்.

தமிழ் பேசும் அந்தப் பெண் கூறிய இன்னொரு விடயம் பலர் தமது மொழி பற்றி எவ் வளவு அறியாமையுடன் இருக்கின்றார்கள். என்பதைப் புலப்படுத்தியது. தான் இன்னொருவருடன் தமிழில் கதைப்பதை அவதானித்த தனது அவுஸ்திரேலிய ஆங்கில சிநேகிதி தனக்குக் கூறியதாவது ஆகா எவ்வளவு அற்புதம், உங்களுக்கு எவ்வளவு பலத்தை அளிக்கிறது தெரியுமா? ஆங்கிலத்துடன் உங்கள் தாய மொழியையும் நீங்கள் அறிந்திருப்பது உங்களுக்கு எவ்வளவு பலத்தை அளிக்கிறது தெரியுமா? தாய் மொழி அறிவு பிள்ளைகளின் பல்வேறு விதமான வளர்ச்சிக்கும் அவர்களது உளவியல் நிலைக்கும் பாலமாக அமையும் என்பதால் பல ஐரோபபிய நாடுகளில் தாய் மொழியை அறிந்திருப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

நாம் எமது மொழியை இழப்பதால் எவ்வெவற்றை இழக்கப் போகிறோம் என்பதை சற்று நினைத்துப் பார்ப்பது பயனுள்ளது. என்று நினைக்கின்றேன். ஆங்கிலத்தில் இது பற்றிப் பல கட்டுரைகள் வந்துள்ளன. அவற்றை எழுதியவர்கள் தமிழர் அல்லர். ஆங்கிலேயர்கள். உங்கள் தாய் மொழியை இழந்து விடாதீர்கள் அதனால் நீங்கள் நாடளடைவில் உங்கள் பண்பாட்டையே இழந்து விடுவீர்கள் பின்னர் நீங்கள் யார் என்பதையே அறியாத நிலையில் இருண்ட வாழ்வு வாழநேரிடும், எனறு அவர்கள் இக் கட்டுரைகளில் எச்சரிததுள்ளனர். இவை தம் நாடுகளில் வாழவந்த பல்வேறு இனத்தவர்களை மனதில் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகள்.

அவர்கள் எதிர்பார்ப்பது வேறு பாடுகளின் மத்தியில் ஏற்படும் ஒருமைப்பாட்டையே. அதாவது அவுஸ்திரேலியாவில் வாழும் பல்வேறு இனத்தவர்கள் அவுஸ திரேலிய பிரஜைகள் என்ற ஒருமைப்பாட்டின் கீழ் ஒவ்வொரு இனமும் ஏனையவரைப் பாதிக்காத முறையில் தத்தமது பண்பாடுகளுடன் தத்தமக்குரிய தனித்துவத்துடன் வாழ வேண்டும் என்பதே. அப்போதுதான் ஓர் ஆரோக்கியமான சமுதாயம் உருவாக முடியும். தங்கள் பண்பாட்டினை இழந்து வேற்று இனத்துக்குரிய உடலுடன் தாம் வாழும் நாட்டின் வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழும் தனித்துவம் மற்ற மனிதர்களைக் கொணட ஒரு சமுதாயத்தை எவரும் விரும்பமாட்டார்கள்.

எனவே தமிழர்களாகிய நாம் எமது சுய அடையாளத்தை உணர்ந்து கொள்வது மிக மிக அவசியம் சுயஅடையாளம் என்றால் என்ன? நான் யார்? என்ற கேள்விக்கு ஒருவர நெஞ்சை நிமிர்த்தி திடமான பதில் சொல்ல முடியுமென்றால் அவர் யார் என்ற அடையாளம் அவருககுப் புரிந்திருக்கிறது. எனலாம். இங்கே நான் யார் என்பது ஆத்மீக ரீதியில் விடை காண் பதற்குரிய கேள்வியல்ல. சமூக அடிப்படையில் பதில் தேடு வதற்கான ஒரு வினா.

நாம் யார்? இந்தக் கேள்விக்கு நாம் இலங்கைத் தமிழர் என்று பதிலளிக்கும் போது எந்த அடிப்படையில் அவ்வாறு கூறுகிறோம் இலங்கையைச் சேர்ந்த தமிழ் பெற்றோருக்குப் பிறந்த ஒரு காரணத்தால் நாம் தமிழராகிவிடுவோமா? அல்லது தமிழகராதி தமிழர் என்ற சொல்லுக்கு வரை விலக்கணம் கூறுவது போல தமிழ் மொழியைப் பேசுவதால் நாம் தமிழராகிறோமா? அப்படியானால் தமிழை நன்றாகப் பேசும் ஒருவர் முற்றாக வேற்றுப் பண்பாட்டைக் கடைப்பிடிப் பாரானால் அவர் தமிழரா? அல்லது தமிழ் கலாசாரத்தை நன்றாகப் பேசும் ஒருவர் முற்றாக வேற்றுப் பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் ஒருவர் தமிழ் மொழியை அறியாதிருந்தால் அவரைத் தமிழர் எனலாம்? தமிழரது அடையாளம் என்ன என்பதை நாம் புரிந்துகொண்டால் தான வெளிநாட்டில் வாழும் எமக்கு அது எவ்வளவு முக்கியம் என்பதை விளங்கிக் கொள்ளமுடியும்.



சொந்த நாட்டில் நாம் எமது இனத்தவ ரோடு கூடிவாழும்போது நான் யார்? என்ற கேள்வியினை ஆத்மீக அடிப்படையில் எழுப்புவதற்குச் சந்தர்ப்பம் உள்ளதே தவிர சமூகரீதியாக அதை எழுப்புவதற்கான தேவை ஏற்படுவதில்லை. ஆனால் வேறு ஒரு நாட்டில் வேறு மொழி பேசி நமது கலாசாரத் திலிருந்து வேறுபட்ட கலாசாரம் உடையவர்களோடு கூடி வாழ நேரும்போது நாம் யார்? எமது பண்பாடு என்ன? என்று அறியவேணடிய அவசியம் ஏற்படு கின்றது. உலக நாடுகளின் வரலாறைப் பார்க்கும்போது ஆள்பவரால் ஆளப்படுகிற இனத்துக்கு ஆபத்து வந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆளப்படுகின்ற இனத்தவர் மத்தியில் தமது மொழி, பண்பாடு, வரலாறு, மதம் பற்றிய விழிப்பு ணர்வும் அபிமானமும் ஏற்பட்டுளளதை அவதானிக்கலாம். ஆனால் ஓர் இனம் வேறு ஒரு நாட்டில் வாழவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் போது இவ்வாறான விழிப்புணர்வைப் பெறுவதில்லை.

இதற்குக் காரணம் அவர்கள் தமது மொழிக்கும் பண்பாட்டுக்கும் ஆபத்து வந்துவிட்டதாக உணரவேண்டிய தேவை ஏற்படாமையே ஆயினும் பல சந்ததிகளில் வாழும்போது ஏதோ ஒரு காலகட்டத்தில் இன வெறியால் பாதிக்கப்படலாம். அப்போது அவர்கள் தாம் யார் என்பதை உணராதிருப்பின் அவர்கள் அந்தப் பாதிப்பிலிருந்து மீள முடியாதிருக்கும் தாம் ஆங்கிலேயரைப்போல ஆங்கிலம் பேசினாலும், அவர் களைப் போலவே வாழ்ந்தாலும் அவர்கள் தமது இனத்தவராக இவர்களைக் கொள்ளவில்லை என்ற உண்மையும் அப்போதுதான் புலனாகும். அத்துடன் தாம் வேரற்ற மரங்களாக வாழ்கின்ற அவலநிலையும் புரியும். இது வெளிநாடுகளில் தமது பண்பாட்டை மறந்து வாழ்கின்ற எந்த இனத்திற்கும் நேரக்கூடிய நிலமையாகும். எனவே எமது சந்ததியினருக்கு அந்த நிலை வராது தடுப்பதற்கான முழு முயற்சியையும் எடுக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

மொழி பண்பாட்டின் ஓர் அம்சமாக விளங்குவதால் அதனை இழக்குமபோது பண்பாட்டையும், அதனால் சுய அடையாளத்தையும் இழக்க நேரிடுகிறது. இது ஒரு மனிதனுக்கு ஏறபடும் மிகப்பெரிய இழப்பு என்பதை பலர் இப்போது புரிந்துகொள்ள இயலாத நிலையில் இருக்கின்றனர். ஒருவர் 40 வயதை அடையும்போது அவருக்குத் தனது தாய்மொழி, பண்பாடு ஆகியவற்றில் பற்று ஏற்படுகிறது. எனினும் அப்போது அது பற்றிய அறிவின்றியிருப்பின் அவற்றைத் தமக்குப் புகட்டாத பெற்றோரின் மேலேயே அவர் வருத்தம் கொள்வார் என்றெரு ஆய்வு தெரிவிக்கிறது.

இங்கு வாழும் பிள்ளைகளுக்கும் தமிழ் எதற்கு என்று கூறும் பெற்றோர்களை நான் சந்தித்திருக்கின்றேன். படிப்பதற்கும் வேலை செய்வதற்குமே மொழி தேவை, அதற்குத் தமிழ் உதவாது என்பதால் அது தேவையில்லை என்பது அவர்களது வாதம். அவர்கள் தூரநோக்கு அற்றவர்கள் என்பது சொல்லாமலே புரியும். இரண்டு மூன்று சந்ததியினருக்குப் பின்னர் இங்கு வாழப்போகிறவர்கள் பற்றி நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். வாழ்க்கை என்பது படிப்பும் வேலையும் மட்டுமல்ல. நாம் நாமாக இருக்க வேண்டும். அது வாழ்வில் மிக முக்கியமான விடயம்.

நாம் நாமாக இருப்பது நமக்கு ஆத்ம பலமளிக்கும் விடயம் அதற்கு எமக்குத் தாய் மொழி அறிவும், தமிழர் வரலாறு பற்றிய அறிவும் அவசியமாகிறது. நாம் எப்படிப்பட்ட இனத்தில் இருந்து வந்திருக்கின்றோம், எமது மூதாதையர் எத்தனை சாதனைகளை நிகழ்த்தியுள் ளனர், எத்தகைய கஷ்டங்களை மனோ பலத்துடன் கடந்துவந்துள்ளனர், எத்தகைய உயரிய பெறுமதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். என்பது போன்ற விடயங்கள் எமக்குப் பெருமிதமளிக்கும், எம்மை உத்வேகப்படுத்தும். நாம் இவ்வாறான வல்லமையுள்ள இனத்தில் பிறந்திருக்கிறோம் என்ற எண்ணம் எமது இருப்புக்கு அர்த்தம் வழங்கும். அத்துடன் நாம் ஒரு தொடர்ச்சியின் பகுதியாக இருக்கிறோம் என்பது எமக்கு மனோ பலமும் ஆத்ம திருப்தியுமளிக்கும். இல்லாவிடின் வேரற்றவர்களாக, அனாதைகளாக நாம் உணர்வதை எம்மால் தவிர்க்க இயலாதுபோகும்.

பண்பாடு என்றால் என்ன என்று வரையறுப்பது மிகவும் கடினமானது. சுருக்கமாகக் கூறுவதனால் அது ஒரு வாழும் முறை நாம் உண்பது, உடுப்பது, பேசுவது, நமது பெறுமதிகள், நாம் நடக்கும் முறை, எண்ணும் விதம் என்று பல்வேறு விடயங்கள் அதனுள் அடங்கும். அவை அனைத்தும் காலத்தின் போக்கிற்கேற்பவும், நாம் வழும் நாட்டின் பண்பாட்டிற் கேற்பவும் மாறும். அவ்வாறு மாறுவதே ஆரோக்கியமானதும் கூட. ஆனால் அதன் உயிர் நாடி அல்லது ஆத்மா ஒரு போதும் மாறாது, மாறவும் கூடாது. ஆடை மாறலாம் ஆனால் காலம் காலமாக எமது இனத்தால் பேணப்பட்டு வந்த பெறுமதிகளை மாறவிடலாகாது. நாம் இலங்கைத் தமிழர் என்று சொல்கிறோம் என்றால் அதற்கு உயிர்நாடியாக உள்ள பண்புகளை நாம்எப்போதும் கொண்டிருக்க வேண்டும். எமது உயர்பண்புகளை மற்றைய இனத்தைச் சேர்ந்தவர்கள் மதிக் கும்படியாகவும், பாராட்டும் படியாகவும் நாம் நடந்துகொள்ளுதல் மிகவும் அவசியம். அதே நேரம் எமது பண்பாட்டில் கால மாற்றத்திற்கு ஒவ்வாதன அல்லது வேண்டத்தகாதன இருப்பின் அவற்றை களைவதும் ஏனைய பண்பாடுகளில் உள்ள நல்லவற்றை ஏற்பதும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும்.

எனவே தாய் மொழியுடன் எமது பண்பாடும், இன வரலாறும் நாம் நாமாக இருப்பதற்குப் பெரிதும் உதவுவன. எமது எதிர் காலச் சந்ததி தமது சுய அடையாளத்தைப் பேணுவதற்கும், தாம் தமிழர் என்று துணிவுடனும் தலை நிமிர்ந்து செல்வதற்கும் வாழ்வதற்கும் ஏற்ற வழிகளைச் செய்வது எம் அனைவரின் தார் மிகப் பொறுப்பாகும். ❄

# இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த முகாம் மீது உகண்டாவில் தாக்குதல்!

## இருபது பொதுமக்கள் பலி

(உகண்டா)

உகண்டாவின் வடபகுதியிலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் இருபது பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த இடம் பெயர்ந்த முகாம்களுக்கு இராணுவத்தினரின் பாதுகாப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் மீது தாக்குதல் நடத்திய கிளர்ச்சியாளர்கள் அங்கிருந்த இடம் பெயர்ந்த மக்கள் வசித்து வந்த அனைத்து குடிசைகளுக்கும் தீ வைத்ததாகவும், இதனால் 11000 மக்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தகவல்தெரிவிக்கின்றன.

உகண்டாவின் வடபகுதி முகாமில் வாழும் மக்கள் தமது சொந்தப் பாதுகாப்பிலேயே வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கு உகண்டாவில் அறுபது இடம் பெயர்ந்த முகாம்கள் உள்ளதாகவும், இவையனைத்திற்கும் படையினர் பாதுகாப்பு வழங்குவதென்பது இயலாத காரியமென உகண்டாவின் இராணுவப் பேச்சாளர் லெப்ரினன்ட் படி அன்குண்டா பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.



எனினும் இந்த தாக்குதலுக்காக இராணுவத் தளபதி கைது செய்யப்பட்டுள்ளார். பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தவறிய காரணத்தால் இவர் மீது நிச்சயம் குற்றத் தாக்கல் செய்யப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தாக்குதல் நடத்திய கிளர்ச்சியாளர்கள் எண்ணிக்கை தெரியாத மக்களை கடத்திச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மக்களுக்கு உடனடியாக குடிசைகளை அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளதாக அந்த மாவட்ட ஆளுநர் பென் ஒல்வா தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த முகாம் முற்றாக எரிக்கப்பட்டதனால் அங்கு உணவு, குடிநீர் வசதிகள் மற்றும் எவ்வித குடிசைகளும் அங்கு இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தான் படையினரின் தாக்குதலில் இருபது வெளிநாட்டு ஆயுததாரிகள் பலி!



பாகிஸ்தானுக்கான ஆப்கான் எல்லைப் பகுதியில் ஆயுததாரிகள் மீது பாகிஸ்தான் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இருபது பேர் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் இராணுவ நிலைகள் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட றொக்கட் தாக்குதலையடுத்து ஆயுத பாணிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ தரப்பில் சேதங்கள் சிறிதளவில் ஏற்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான தகவல்கள் எவையும் முழுமையாகத் தெரியவரவில்லையென பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்தது.

இந்த தாக்குதலில் ஈடுபட்ட ஆயுததாரிகள் அனைவரும் வெளிநாட்டவர் எனவும் இதில் ஒருவர் பிடிபட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியான பிரிகேடியர் ம.ஃமூட் ஷா தெரிவித்தார்.

இந்த ஆயுததாரிகளில் மூவரின் உடல்கள் பாகிஸ்தான் படையினரால் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மூவரும், வெளிநாட்டவர் எனவும் பாகிஸ்தானின் இராணுவப் பேச்சாளர் சயூகாத் சுல்தான் தெரிவித்தார்.

# சீனத் தொழிலாளர் மீது ஆப்கானில் தாக்குதல்!

## பதினொரு பேர் பலி



ஆப்கானில் வீதி திருத்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சீனத் தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பதினொரு போ கொல்லப்பட்டனர். ஆறுபேர் படு காயங்களுக்குள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஆப்கானின் குண்டுஷ் பிரதேசத்தில் இடம்பெற்றது. சுமார் இருபது பயங்கரவாதிகள் சீனத் தொழிலாளர்கள் பணிபுரியும் பகுதிக்கு வந்து துப்பாக்கித் தாக்குதலை நடத்தியதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

தாக்குதல் நடத்தியவர்கள் மீது தாம் தாக்குதலை நடத்தியதாகவும் ஆப்கான் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். வீதி திருத்த வேலைகளில் ஈடுபட்ட பெருந்தொகையான வேலையாட்கள் இந்த தாக்குதலை அடுத்து தமது வேலைகளை ஒரு வாரத்துக்கு இடைநிறுத்தி உள்ளனர்.


அரச யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும், கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் ஏனைய தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், உலக நாடுகள் 102 இனால் அங்கீகரிக்கப்பட்ட இங்கிலாந்து City Guilds சான்றிதழ் பெறும் வாய்ப்பு

City & Guilds

இலங்கையிலிருந்து நேரடியாக London City &guilds நிறுவனத்தினால் நடாத்தப்படும் செய்முறைப் பரீட்சையில் தோற்றி சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு தற்போது யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செய்முறைப் பரீட்சை மேற்கொள்வதற்கு ஏதுவாக குறுகியகாலப் பயிற்சியை வழங்குவதற்கான

| பாடநெறி | செயன்முறை பரீட்சைக் காலம் | பயிற்சிக் கட்டணமும் பரீட்சைக் கட்டணமும் | City & Guilds சான்றிதழ் கட்டணம் |
|---|---|---|---|
| மின்னிணைப்பு (Electrical Instllation ) | 24 hrs | Rs. 3864.00 | £22 |
| உலோக இயந்திரவியல் (Metal Mechining) | 40 hrs | Rs. 3645.50 | £16 |
| மரவேலை தொழில் நுட்பப் பயிற்சி (Timber Vocation) | 32 hrs | Rs. 5934.00 | £22 |
| பொருத்துதல் மற்றும் குழாய் வேலைகள் (Fabrication Welding & Pipe work) | 96 hrs | Rs. 7670.50 | £16 |
| கட்டுமான வேலை (Masonary) | 32 hrs | Rs. 5589.00 | £22 |
| குழாய் நீர் அமைத்தல் (Plumping) | 16 hrs | Rs. 4209.00 | £22 |

விண்ணப்படிவங்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அலுவலகத்திலும், கிளி நொச்சி தொழில்நுட்ப நிறுவனத்திலும் பெற்று 30.06.2004 க்கு முன்பாக தொழில்நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

குறிப்பு :-

பயிற்சி மற்றும் பரீட்சைக்கான கட்டணங்களை ஹற்றன் நஷனல் வங்கியின் நகரக் கிளை (HNB City office) கணக்கு இல. 002-0741376 இல் செலுத்தி பற்றுச் சீட்டினை விண்ணபத்துடன் இணைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு அணுகுங்கள்: திணைக்களம்/கல்லூரி

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

அல்லது

யாழ்ப்பாணம் 021-2225409/ மட்டக்களப்பு 065-2246557/ திருகோணமலை 026-2223034

City &Guilds நிறுவனம்

6 மாடி Access கட்டடம் 278, யூனியன் பிளேஸ், கொழும்பு -2

தொலைபேசி (011) -5361427/8

தொலை நகல்: srilanka@city-and-guilds.co.uk

வெப் தளம்: www.cityandguilds.com

(C-2658)



பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி பிரபாரெட்டியின் மாணவி நடாத்தும்

கலந்துரையாடல்



மேற்படி இக்கலந்துரையாடல் நிகழ்வானது, திருமதி பிரபாரெட்டியிடம் பயிற்சிபெற்று சான்றிதழ் பெற்ற மாணவர்களையும், அழகுக் கலைபற்றி அறிந்துகொள்ள ஆர்வமுள்ள மாணவர்களையும் கருத்தில்கொண்டு நடைபெறவுள்ளது.

இடம் :- யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபம்.

காலம் :- 13.06.2004 ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- காலை 9.00 மணி

ஆர்வமுள்ள அனைவரும் வருக.

அனுமதி இலவசம்.

T.P. 024 - 4 - 589464

071 - 2346781

077 - 6209963

நிர்வாகம்.

(சி-2652)



கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

ஏறத்தாழ 4000 மீன் இனங்கள் முருகைக்கற்பாறைக்கு உரிய இனங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இது கடல்மீன் இனங்களில் கால்வாசிப்பங்கு ஆகும்.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மன்னார் - அடம்பனில் காவல் நிலையம் திறப்பு!

மன்னார்-அடம்பன் பிரதேசத்தில் தமிழீழ காவற்துறைப்பணிமனை ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தமிழீழக் காவற்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழாவில் பொதுச்சுடரை அடம்பன் பங்குத் தந்தை ஞானாதிக்கம் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியினை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குகனும், காவற்துறைக் கொடியினை தமிழீழக் காவற்துறைப் பரிசோதகரான பவானியும் ஏற்றி வைத்தனர்.

காவற்துறைப் பணியகத்தினை முதற்பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் தந்தை பேதுரு நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

இந்தநிகழ்வில், ஆசியுரையினை பங்குத்தந்தை ஞானாதிக்கமும், சிறப்புரையை தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் நிகழ்த்தினர்.

# விஷம் தீண்டியதால் சிறுமி ஒருவர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

அதிகாலை வேளை விஷஜந்து தீண்டியதால் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச்சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

சற்குணநாதன் ஜோதிகா (வயது 07) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது - அதிகாலை 4 மணியளவில் வயிறு வலிப்பதாகத் தெரிவித்து, வாந்தியெடுத்த சிறுமி மயக்கமடைந்து செல்வதைக் கண்ட பெற்றோர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது சிறுமி இறந்துவிட்டார்.

எனினும், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிறுமியின் உடலைப் பெற்றோர் எடுத்துவந்து பரிசோதித்தபோது - விஷம் உடலில் பாய்ந்ததாலேயே சிறுமி இறந்தமை தெரியவந்தது.

எனினும், சிறுமியின் உடலில் விஷம் எவ்வாறு பாய்ந்தது என்பது கண்டு பிடிக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

சிறுமியின் உடல் பரிசோதனையின்பின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ப)

# நான்கு கடற்கரும்புலிகள் வெடிவிபத்தில் வீரச்சாவு

(கிளிநொச்சி)

சர்வதேசக் கடற்பரப்பில் 2003 ஜீலை 30 ஆம் திகதி இடம்பெற்ற வெடிவிபத்தில் நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

கடற்கரும்புலி லெப்டினன் கேணல் கில்லறி/முருகேசன் (கணேசன் சிவகுருநாதன் - சொந்த முகவரி மூத்த விநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம், தற்காலிக முகவரி சூசையப்பர் கோவிலடி, காத்தான்குளம், நட்டான் கண்டல், மன்னார்).

கடற்கரும்புலி மேஜர் இசைநிலவு/மதிவண்ணன் (கந்தசாமி தனேந்திரன் - சொந்த முகவரி தோப்புக்காடு, காரைநகர், யாழ்ப்பாணம், தற்காலிக முகவரி - 2 ஆம் யூனிற், பாலிநகர் வவுனிக்குளம், மல்லாவி),

கடற்கரும்புலி மேஜர் புகழினி (வடிவேல் விஜயராணி சொந்த முகவரி - இலங்கைத் துறைமுகத்துவாரம், ஈச்சிலம்பற்றை மூதூர், திருமலை, தற்காலிக முகவரி - கணேஸ் திட்டம், வள்ளிபுனம் , புதுக்குடியிருப்பு) - கடற்கரும்புலி மேஜர் தனிசுடர்/பூவிழி (இராசலிங்கம் மலர்விழி, சொந்த முகவரி - பாடசாலை முன்பாக வேரவில், பூநகரி, மன்னார், தற்காலிக முகவரி - இல.106, கோட்டை கட்டியகுளம், மல்லாவி) ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர்.

# விபத்துக்குள்ளான விமானத்தின் சிதைவுகள் மீட்கப்பட்டன

(கொழும்பு)

பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளாகி நீர்கொழும்புக் கடல் நீரேரியில் வீழ்ந்த விமானப்படையின் 'மிக் - 27' ஜெட் விமானத்தின் சில பாகங்கள் நேற்று மீட்கப்பட்டன.

நேற்று முன்தினம் கடனீரேரியில் வீழ்ந்த விமானம் மூன்று துண்டுகளாக மூழ்கியிருந்தது. இதை மீட்க நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

எனினும் நேற்றுக்காலை கடற்படையினரின் சுழியோடிகள் உதவியுடன் விமானப்படை மீட்புநடவடிக்கையில் ஈடுபட்டது. இதன்போது விமானத்தின் பிரதான துண்டுகளில் ஒன்றான வால்ப்பகுதி உட்பட விமானத்தின் சில பகுதிகள் மீட்கப்பட்டு தரைக்குக் கொண்டு வரப்பட்டன.

விமானத்தின் இயந்திரப் பகுதி விமானப்படையின் எம்.ஐ. 17 ரக ஹெலியின் உதவியுடன் மீட்கப்பட்டதாக விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த சில்வா தெரிவித்தார்.

# சமூகவிரோத செயல்களில் ஈடுபடுவோர்க்கு வவுனியாவில் வன்னியன் படை எச்சரிக்கை!

சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படுவர் என வவுனியாவில், புதிய வன்னியன் படையால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரசுரத்தில், சமூக விரோத செயற்பாடுகளில் நாட்டம் உடையவர்களும் ஈழ கோட்பாட்டிற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளில் தொடர்புடையவர்களும் மற்றும் ஆட்கடத்தல், கொலை, கொள்ளை, அச்சுறுத்தல்கள், கசிப்பு குதங்கள் விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் ஈடுபடுபவர்களின் பின்னணியில் இருப்பவர்களும், தங்கள் சுய நலனுக்காக அரச கட்சிகளை சார்ந்தும், தன்னலம் கருதி செயற்பட்டு கொண்டிருக்கும் கட்சியைச் சார்ந்தவர்களையும் தாம் இனம் கண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் செயற்பாடுகள் மேலும் அதிகரிக்குமாயின் அவர்கள் ஒவ்வொருவரும் கடும் தண்டனைக்கு உள்ளாகுவார்கள் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துவதாகவும் அந்தத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எதிர்க் கட்சித் தலைவருடன் சந்திப்பு!

## முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழத் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். நேற்றுக் காலை 11.30 மணிக்கு ஆரம்பமாகிய இந்தச் சினேகபூர்வ சந்திப்பில் தற்போதைய அரசியல நிலை, அரசாங்கத்தின் ஸ்திரமற்றபோக்கு, நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள், குறித்து மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது. இந்தச் சந்திப்பில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், சுரேஸ்பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார்பொன்னம்பலம், மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொண்டதாகத் தெரியவருகிறது. (01)

# தேர்தல் நடத்தும் திட்டத்துக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் எதிர்ப்பு!

தற்போதைய அரசியல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தால், அதனை எதிர்க்கட்சிகள் நிராகரிப்பதென முடிவுசெய்துள்ளன.

நடந்து முடிந்த மூன்று நாடாளுமன்றக் கூட்டத்தொடரிலும் எந்தவொரு பிரேரணையையும் அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியவில்லை. அத்துடன், நாடாளுமன்ற சபாநாயகரை தமது கட்சி சார்பாக தெரிவு செய்வதிலும் அரசாங்கம் தோல்வியையே தழுவியது.

இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணம் அரசாங்கத்திற்கு பெரும்பான்மைப் பலம் இல்லாமையே ஆகும். இந்தநிலையில், அரசதரப்பு அமைச்சரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் தேர்தலை விரைவில் நடத்துவது குறித்து அண்மையில் தெரிவித்தார்.

எனவே அரசாங்கம் பல வழிகளிலும் நெருக்கடியைச் சந்திக்கின்ற இந்த நிலையில், தேர்தல் அறிவிப்பொன்றை வெளியிடுமாக இருந்தால் அதனை நிராகரிப்பதென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சகல எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

அரசியல் யாப்பின்படி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஒரு வருடத்திற்குள் நாடாளுமன்றத்தை கலைக்க முடியாதெனவும், பிரதமரும்-அமைச்சரவையும் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்க சிபார்சு செய்தால், அதனை அவர் செய்யலாமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கத்தின் பொதுக் கூட்டமும், நிர்வாகத்தெரிவுக் கூட்டமும் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

யாழ். பல.நோ.கூ.சங்க மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெறவுள்ள இந்தக்கூட்டத்தில் மிக முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படுவதுடன், இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கலந்துகொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்களின்

## 18 ஆம் ஆண்டு நினைவு நாள்

மண்டைதீவு கடற்பரப்பில் படுகொலை செய்யப்பட்ட 31 அப்பாவி குருநகர் மீனவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு தினம், பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கொலை செய்யப்பட்ட மீனவர்களுக்கு அமைக்கப்பட்ட தூபிக்கு முன்பாக. சிறப்பு விருநதினர்கள் பான்ட் வாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்பட்டு பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நிகழ்வுகள் அரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை பங்குத் தந்தை சகாநாயகம் அடிகளார், வடமராட்சி கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர், கடற்புலிகளின் யாழ்மாவட்டப் பொறுபபாளர் இனியவன், ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக்கொடியை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கபிலன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்களின் நினைவாக நடத்தப்பட்ட உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், விளை யாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

# க.பொ.த. உயர் தரத்திற்கு புதிய பாடம் அறிமுகம்

க.பொ.த உயர்தரப் பாடத்திட்டத்தில் அடுத்த மாதம் முதல் தகவல் தொழில்நுட்பம் என்ற பாடமும் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானம், வர்த்தகம், கலைப்பிரிவுகளில் கல்விகற்கும் தகுதி உடைய மாணவர்கள் இந்தப் பாடத்தைக் கற்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடத்திட்டம் தொடர்பாக ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஆலோசகர் திலந்த விதானகே தெரிவிதார்.

## எதிர்க்கட்சிகளின்....

டமைப்பால் மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இ.தொ.க, முஸ்லிம் காங்கிரஸ், ஹெல உறுமய ஆகிய கட்சிகள் வற்புறுத்தின.

இந்தக் கூட்டத்திலேயே 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்ட மகஜர் சபாநாயகரிடம் கையளிக்க முடிவு செய்யப்பட்டு நேற்று மாலை இது கையளிக்கப்பட்டது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் 113 ஆக இருக்கும் போது 117 உறுப்பினர்கள் எதிர்க்கட்சிக் கூட்டணியில் இணைந்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சிக் கூட்டணியில் இணைந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க....

தளபதிக்கு கெமுனு படைப்பிரிவு அணிவகுப்பு மரியாதையை வழங்கியது.

இதன் பின்னர், இடம்பெற்ற சந்திப்பின் போது இருநாட்டுத் தளபதிகளும் - இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புகள், பரிமாற்றங்கள் குறித்தும், புதிதாக உருவாக்கப்படவுள்ள அமைதி நடவடிக்கைகளுக்கான உதவிப்பயிற்சி நிலையம் குறித்தும், இந்தப்பயிற்சி நிலையத்தின் கற்கைநெறிகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தப்பயிற்சி நிலையத்திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொள்ளவே அமெரிக்கத்தளபதி இலங்கை வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இராணுவத் தளபதியுடனான சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட லெப். ஜெனரல் கம்பெல் 20 வருடகால இனரீதியான போராட்டத்தை எதிர்கொண்ட இலங்கை - தீவிரவாதம் குறித்த பல பாடங்களை கற்பிக்கக் கூடிய நிலையில் இருப்பதாக தெரிவித்தார்.

## நோர்வேயுடன் ...

எனவே, இடைக்கால நிர்வாக சபை ஏற்பட்டு நல்ல முறையில் எமது மக்கள் அனுபவிப்பதன் மூலமே இறுதித்தீர்வு குறித்து எமது மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர். இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் பெருமளவில் துன்புற்ற நிலையில் உள்ளனர். அவர்களது அவலநிலை ஒரு முடிவுக்கு வர வேண்டும். மற்றும் சிறையிலுள்ள கைதிகள்நிலை, காணாமற்போனவர்களின் நிலைமை, மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு மக்கள் குடியேற அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பாக சாதகமான முடிவுகளை எடுப்பதாகவும், புலிகளும், நாட்டிலுள்ள அனைத்து இன மக்களது செயற்பாடுகளுக்கு உதவவேண்டும். அவர்கள் உதவினால் தான் அனைவரும் சேர்ந்து இதனை நிறைவேற்றலாம் என ஜனாதிபதி தெரிவித்ததாக இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் - ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அமைச்சர்களான - சுசில் பிரேமஜயந்த, நிமால் சிறிபால டி சில்வா, மங்கள சமரவீர ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் - சிவாஜிலிங்கம், ஜெயானந்த மூர்த்தி தவிர மற்றைய அனைவரும் கலந்து கொண்டனர்.

## துறைமுகங்களின் ...

கொழும்பு, காலி, திருகோணமலை, பருத்தித்துறை மற்றும் காங்கேசன் துறை ஆகிய இடங்களிலுள்ள துறைமுகங்களின் பாதுகாப்புத் தொடர்பான திட்டங்களையே கடற்படைத் தளபதி அமைச்சரிடம் கையளித்தார்.

இந்த துறைமுகங்களின் பாதுகாப்புத் தொடர்பான திட்டத்தையே சர்வதேச விதிமுறைகளுக்கமைய அமைச்சர் மங்கள் சமரவீர கடற்படையினரிடம் கையளித்தார்.

இதேவேளை - கப்பல் துறைமுக அமைச்சின் கீழ் இயங்கும் வர்த்தக கப்பல் பிரிவு சகல துறைமுகங்களுக்குமான பாதுகாப்புத் தொடர்பாக ஆராய்ந்து, அந்த துறைமுகங்களுக்கான பாதுகாப்பு தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் தாக்கப்பட்டதன் பின்னர், இலங்கையிலுள்ள சகல துறைமுகங்களுக்குமான பாதுகாப்பு கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்பின்னர், துறைமுகங்களுக்கான பாதுகாப்பு கடற்படையால் அதிகரிக்கப்பட்டது.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கப்பல்கள் அனைத்தும் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட வேண்டுமாயின் சர்வதேச கப்பல் பாதுகாப்பு சான்றிதழையும் பெற்றிருக்க வேண்டும். அடுத்த மாதம் சர்வதேச சட்ட விதிகளுக்கமைய இது நடைமுறைக்கு வருகின்றது.

இதன்படி இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் கடந்த மார்ச் மாதம் இந்தச் சான்றிதழைப் பெற்றுள்ளன. மற்றைய தனியார் கப்பல்கள் இதனைப் பெறவேண்டியுள்ளது

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.